விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 22 ஞாயிற்றுக்கிழமை (07.08.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 231

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# முழு இலங்கைக்கும் பொருத்தமான தீர்வுக்கு வருவதே அரசின் முடிபாகும்

## அமைச்சர் நிமால் அறிவிப்பு



(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல் முழு இலங்கைக்கும் பொருத்தமானதும், சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான தீர்மானம் ஒன்றுக்கு இணங்குவதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் முடிபற்றவையாகத் தொடர்வதை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசிற்கு நிபந்தனை விதித்திருந்தது. இது தொடர்பில் விளக்கமளிக்கும்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவிக்கையில், (19ஆம் பக்கம் பார்க்க)

## வவு.நகரசபைத் தலைவருக்கு கொலை அச்சுறுத்தல்

(வவுனியா)

வவுனியா நகரசபைத் தலைவர் ஐயாத்துரை கனகையாவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. கடிதம் மூலம் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

48 மணி நேரத்திற்குள் நகரசபைத் தலைவர் பதவியிலிருந்து விலக வேண்டும். இதனைச் செய் (19ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்டம் சம்பியன்

(மன்னார்)

வடக்கு மாகாண விளையாட்டு விழாவில் யாழ்.மாவட்டம் சம்பியனானது. வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாகாணமட்ட விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வு நேற்று மன்னார் பொது விளையாட்டரங்கில் நடைபெற்றது.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளை (19ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதி எங்கும் சிங்கள மயம்

## இந்திய ஊடகவியலாளர் விபரிப்பு

(சென்னை)

இலங்கையின் வட பகுதியில் தாங்கள் சுவாசித்த இடமெல்லாம் சிங்கள வாசம் வீசியதாகவும் அப் பகுதி திட்டமிட்டு சிங்கள, பௌத்த மயமாக்கப்பட்டு வருவதாகவும் சென்னையைத் தளமாகக் கொண்டு இயங்கும் தவிக்கெண்ட் லீடர் என்னும் இணையத்தளத்தில் அதன் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

வட பகுதியிலுள்ள தமிழர் தாயகப் பிரதேசங்களின் ஊடாக பயணம் செய்பவர்கள் அப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் மாற்றங்களைப் பார்த்து அதிர்ச்சி அடைவார்கள் என இந்த இணையத்தளத்தில் அதன் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து இந்த இணையத்தளத்தில் அவர் எழுதிய செய்திக் கட்டுரையில்,

தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசமாகவும் அம் மக்களின் கலாசாரங்களை வெளிப்படுத்தி நிற்பதுமான இப் பிரதேசங்கள் தற்போது சிங்கள மயமாக்கப்பட்டு வருகின்றது.

தமிழ் மக்கள் (19ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தை தொடர வேண்டுமானால் அரசின் சிந்தனையில் மாற்றம் வேண்டும்

## இரா.சம்பந்தன் அறிவிப்பு

(கொழும்பு)

அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தை தொடரவேண்டுமானால் அரசாங்கத்தின் சிந்தனையில் மாற்றம் ஏற்பட வேண்டும். அத்துடன் எழுத்துமூலமான தனது நிலைப்பாட்டை அரசாங்கம் முன்வைக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாம் எடுத்துள்ள முடிபு அவசரப்பட்டு எடுக்கப்பட்டதொன்றல்ல. பேச்சுவார்த்தை என்ற பெயரில் அரசியல் தீர்வு காணுவதை இழுத்தடித்துக்கொண்டு போவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

நாம் வழங்கிய கால அவகாசத்தை அரசாங்கம் தனக்குச் சாதகமாகவே பயன்படுத்தி வந்துள்ளது. இதற்கு நாம் இடம்கொடுக்க முடியாது. நாம் எழுத்தில் கையளித்த யோசனைகளுக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கம் உரிய முனைப்புக் காட்டினால் பேச்சைத் தொடரத் தயார்- சுமந்திரன்



(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பில் அரசாங்கம் உரிய முனைப்புக் காட்டினால் பேச்சுவார்த்தைகளை தொடரத் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இறுதியாக அரசாங்கத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது மூன்று நிபந்தனைகளை விதித்ததாக ஒப்புக்கொண்டுள்ள அவர், குறித்த மூன்று நிபந்தனைகள் தொடர்பில் அரசாங்கத்தின் (20ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்கள் சுயமாகப் போராடியே உரிமையை வென்றெடுக்க வேண்டும்

## அரசு ஏமாற்றிவிட்டது; ஜே.வி.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சேர்ந்து நாடகமாடுவதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக தமிழ் மக்கள் சுயமாக போராடியே சுதந்திரத்தையும் அரசியல் உரிமைகளையும் வென்றெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் மீண்டும் தள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வாக அதிகாரப் பகிர்வை வழங்க இந்தியா விற்கும் ஏனைய சர்வதேச நாடுகளிற்கும் அரசாங்கம் ஏற்கனவே உறுதிமொழி அளித்துவிட்டது. ஆனால் அதனை நிறைவேற்றாது முழு உலகத்தையும் அரசாங்கம் ஏமாற்றி வருகின்றது.

போர் முடிபடைந்து இரண்டு வருடங்கள் முடிந்துவிட்ட நிலையில் (02ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் மீள் குடியேற்றம் ஐ.நா.சபை கவலை

(கொழும்பு)

வடபகுதியில் போரினால் இடம்பெயர்ந்து மீள் குடியேறியுள்ள மக்களில் பெரும்பாலானவர்களுக்கு அடிப்படை சேவைகள், இருப்பிடம் மற்றும் குடிநீர் போன்ற விடயங்கள் போதுமான அளவில் கிடைக்கவில்லை என்று ஐ.நாவின் துணை பொதுச் செயலாளரான கத்தரின் பரக் கூறியுள்ளார்.

வட பகுதிக்கு விஜயம் செய்த அவர் நேற்றுமுன்தினம் கொழும்பில் செய்தியாளர்களை சந் (19ஆம் பக்கம் பார்க்க)

## வர்த்தகப் பெருமக்களே...

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-0729994777

## வீடு விற்பனைக்கு

சுதுமலை வடக்கு மானிப்பாயில் 2 1/2 பரப்புக் காணியில் பெரிய கல் வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0773502821

(5747)

## காணி விற்பனைக்கு

நுணாவில் யூனியன் பேக்கரி அருகாமையில் (கண்டி வீதியில் 100 யார் தூரத் தில்) 4 பரப்புக் காணியும், வீடும் உடன் விற்பனை க்கு உண்டு.

T.P :-0770583546

(5719)

## FINANCIAL SPONSOR

for Student Visa any country

VTL Management (Pvt) Ltd
Colombo - 3.

072-9994777/011-7902938


# தமிழ் மக்கள் சுயமாகப் போரா...

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். கடந்த தேர்தல்களிலும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதாக அரசாங்கம் கூறியிருந்தது. அது மட்டுமன்றி இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுக்கு அரசியல்தீர்வை வழங்குவது தொடர்பில் உறுதிமொழிகளை வழங்கியிருந்தது.

ஆனால் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து தீர்வு விடயத்தில் இழுபறி நிலையை ஏற்படுத்தி அனைவரையும் அரசாங்கம் ஏமாற்றி வருகிறது. தற்போதைய அரசாங்கத்தினால் சிங்கள மக்களுக்கே ஒன்றும் கிடைக்காத போது தமிழ் மக்களுக்குத் தீர்வுத்திட்டமோ ஜனநாயகமோ கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால் தற்போதைய அரசு ஒருபோதும் நல்லாட்சியை விரும்புவதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தங்களுடைய அரசியலுக்காக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளுக்குச் சென்று தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றனர். 13வது திருத்தச் சட்டம், அதிகாரப் பகிர்வு போன்றவற்றை பெற்றுக்கொண்டு தமிழ் மக்களை மீண்டும் அடிமைகளாக்கவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

கடந்த 30 ஆண்டு காலமாக இடம்பெற்ற உள்நாட்டுப் போரினால் வடக்கு, கிழக்கு மக்கள் மிகவும் மோசமான முறையில் பாதிக்கப் பட்டிருந்தனர். போர் முடிவடைந்த பின்னர் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழ முடியும் என அவர்கள் நம்பியபோதிலும், அதிலும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

அவர்கள் தற் போது படைத்தரப்பினரின் கட்டுப்பாட்டிற்குள் வாழ வேண்டிய நிலையே ஏற்பட்டுள்ளது.

எனவே தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டுமாயின் தமது உரிமைகளுக்காக போராட வேண்டும் என ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். (ந-8)


## சேவை முகவர்
### வீடு, காணி விற்பனைக்கு

மணற்தறை லேன், வைமன் றோட், பழம் வீதி, ஸ்ரான்லி றோட், 1ம் குறுக்குத்தெரு, கோண்டாவில், நுணாவில், ஏ9 வீதி 21 பரப்பு தென்னம் காணி என்பன விற்பனைக்கு உண்டு. யாழ். நல்லூரில் விற்க விரும்புவோரும் வாங்குவோரும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு :- சுந்தரம்

(சி:-3958) T.P:- 0212229177,0774819801

## கணக்காளர் தேவை

கிளிநொச்சி பரந்தனில் இயங்கி வரும் பிரபல நிறுவனம் ஒன்றிக்கு சகல துறையிலும் அனுபவம் உள்ள கணக்காளர் (எக்கவுண்டன்) தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். விற்பனை மற்றும் கணக்கு அனுபவம் உள்ளவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளவும் கிளிநொச்சி அல்லது பரந்தனில் வசிப்பவர்களுக்கு, முன்னுரிமை வழங்கப்படும், நேர்முகப் பரீட்சை, திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை நடைபெறும்.

144/3 முல்லைத்தீவு, பரந்தன்.

T.P.: 0777575740 (5743)

## Mobile Phone Unlocking

R and R Cellular Shop(Pvt)Ltd Pioneer in Mobile Phone Unlocking and Repairing in Sri lanka. We are in Jaffna Town at 127, M.P.C.S. Building, K.K.S.Road, Jaffna.

We Unlock all kind of mobile phones at best price

All kind of
Nokia Phones SL3
Sony Ericsson,
Samsung,
Lg,
Motorola,
I Phones
Htc phones

All kind of Dongles E153 E173 Etc Etc

Call now for Your requirement
Mr.Razmi 0722441441,0722321038

Mohamed Zuhair
Managing Director
R and R Telecom Jaffna(Pvt)Ltd
H.P.:0722441441, Office Tel:0212221644

(C-3956)

## தவறிவிட்டது

சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை எனும் முகவரியைச் சேர்ந்த இரவீந்திரநாதன் கணேஸ்வரி என்பவரது தேசிய அடையாள அட்டை (577741891V) மற்றும் பெறுமதிமிக்க ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் மானிப்பாய் வீதிக்கும் யாழ். நகருக்கும் இடையிலான போக்குவரத்தின் போது தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு :- தனிஸ் ரெக்ஸ், ஆனைக்கோட்டை

T.P : 0212222955 (5745)

## வாடகைக்கு

சுன்னாகம் பஸ் நிலையத்தில் கடை ஒன்று வாடகைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளவும் :
T.P : 0212240405

(5746)

## வேலைவாய்ப்பு

யாழ்.நகரின் பிரபல தனியார் கிளினிக்குக்கு 18 வயதிற்கு மேற்பட்ட க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியெய்திய பெண் வேலையாட்கள் தேவை. தகைமை உடையோர் சுயவிபரக்கோவையுடன் இல.514/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 09.08.2011 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு சமுகம்தரவும். மேலதிக தொடர்புகளுக்கு : 0776569960

நிர்வாகி.

(5742)

## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

### மீண்டும் யாழில்

05.08.2011 முதல் 10.08.2011 வரை 5 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம்,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ரூரிஸ் இன் (சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில்,
392, மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம்.

(C-3918)

## VACANCY
### (கிளிநொச்சி காரியாலயம்)

union assurance
Trust in your tomorrow, today.

உங்கள் கடுமையான உழைப்புக்கு தகுந்த வெகுமதிகளுடன் கூடிய வருமானம் கிடைக்கக் கூடிய கௌரவம் மிக்க, நிரந்தர தொழில்துறையில் முன்னேற விரும்பினால் நீங்கள் எதிர் பார்க்கும் அருமையான சந்தர்ப்பம் இதுதான்.

வாருங்கள் உலகத்தரம் வாய்ந்த தொழில்துறை நிபுணர்களோடு இணைந்து நன்மைகளை அடைந்து கொள்வதோடு உலகத்தரம் வாய்ந்த பயிற்சிகளையும் அபிவிருத்தி வசதிகளையும் பெற்றுக்கொள்ளலாம். உங்கள் தொழில்துறை முன்னேற்றத்துக்கான உறுதியான எதிர்பார்ப்புக்களோடு கவர்ச்சிகரமான கொடுப்பனவு.

தொழில் தேடுவதை நிறுத்துங்கள். காப்புறுதி ஆலோசகராக யூனியன் அஷ்யூரன்ஸ் உடன் இணைந்து கொள்ளுங்கள். வாருங்கள் வாய்ப்பினை அடைந்து கொள்ளுங்கள்.

காப்புறுதி ஆலோசகர் பதவிக்கான தகுதிகள்

1.க.பொ.த (சா/த)ல் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்
2.வயது எல்லை 22-50
3.ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
4.நிரந்தர வசிப்பிடம் கிளிநொச்சி/முல்லைத்தீவு மாவட்டம்

அபிவிருத்தி உத்தியோகத்தர்

1.க.பொ.த (உ/த)ல் சித்தியடைந்திருத்தல்
2.க.பொ.த (சா/த)ல் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்
3.வயது எல்லை 25-50
4.வியாபாரத்துறையில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
5.ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
6.நிரந்தர வசிப்பிடம் கிளிநொச்சி/முல்லைத்தீவு மாவட்டம்

மேற்குறிப்பிட்ட தகுதியுள்ளவர்கள் பின்வரும் முகவரிக்கு 12.08.2011 (வெள்ளி) என்ற திகதி காலை 9.30 மணிக்கு கல்விச் சான்றிதழ்களுடன் சமுகம் தரவும். முகாமையாளர் கிளிநொச்சி பிரதேசம்.

அம்பாள் நகையகம் மேல்மாடி, ஏ9, கரடிப்போக்கு, கிளிநொச்சி. (Mobile No : 077314529)

(சி-3953)



## சிவபார்வதி ஜோதிட நிலையம்

### பண்டித்-மஞ்சுநாத சுவாமி

தொ.பே. இல: 077 8949044

அன்பானவர்களே!

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில், வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம் போன்ற விடயங்களையும், கணவன்-மனைவி ஒற்றுமையின்மை, கோர்ட் வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்கு பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல், வெளியூர் பயணங்கள், கல்வி உத்தியோகம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், எதிரிகள் கண்திருஷ்டி போன்ற எல்லாவித பிரச்சினைகளையும் எதிர்கால பலாபலன்களையும் தெரிவிப்பார்.

சண்ஜெய உணவகம் (மேல்மாடி)

414, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)
நேரம்:- காலை 7.00 மணி முதல் மாலை 7.30 மணி வரை
கட்டணம் ரூபா 101/-

(சி-3957)

SAMSUNG

# இரட்டை

சிம்கள் விநோதங்கள்

கைக்கு அடக்கமான இரு ஹீரோக்கள் உங்கள் வசமே. நீண்ட வேளை video recording மற்றும் முழு அளவிலான திரையில் காட்சிகளை கண்டுகளிக்கலாம்.




**Samsung HERO 2230** ரூபா. 4,990/=

**Samsung HERO 2232** Dual SIM ரூபா. 5,990/=

Next is what?™
SAMSUNG mobile

**கையடக்க தொலைபேசிக்கு ஒரு வருட உத்தரவாதம் / பட்டரி சாஜர் மற்றும் இயர்ஃபோனுக்கு 6 மாத உத்தரவாதம்**

**தேசிய விநியோகஸ்தர்கள்** : வரையறுக்கப்பட்ட ஜோன் கீல்ஸ் ஒ.ஃபிஸ் ஒடோமேஷன் (தனியார்) நிறுவனம், 90, யூனியன் ப்ளேஸ், கொழும்பு - 02, தொலைபேசி இல : 011 2 313 000, உடன் அழைப்பு : 0777 902 887, ஃபெக்ஸ் : 011 2 431 745, ஈ-மெயில் : samsung@jkoa.lk **ஸேம்ஸங் நுகர்வோர் சேவை நிலையம்** : **கொழும்பு** : வரையறுக்கப்பட்ட தஃபோன் கம்பனி இன்டர்நெஷனல் (தனியார்) நிறுவனம், இல 4, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு - 04. உதவி அழைப்பு : 0777 322 223/0777 595 595. **காலி** : 124 C, வக்வெல்ல வீதி, மினுவங்கொட. அழைப்பு : 0777 361 444. **கண்டி** : 174, கொடுகொடல்ல வீதி. அழைப்பு : 0777 487 447. ஈ-மெயில் support.srilanka@samsung.com **ஸேம்ஸங் தொ.பே அழைப்பு நிலையம்** : 011 7 347 070/011 7 348 080, **பிராந்திய விநியோகஸ்தர்கள்** : **கொழும்பு, களுத்துறை, கண்டி, மாத்தளை, நுவரெலிய** மற்றும் **கேகாலை** : வரையறுக்கப்பட்ட சொஃப்ட்ரிங்ஸ் டெக்னொலஜிஸ் (தனியார்) நிறுவனம். - 0718 726 497. **கம்பஹா** : வரையறுக்கப்பட்ட செல்மார்ட் டெலிகொம் சேர்விசஸ் (தனியார்) நிறுவனம். - 0715 364 356. **புத்தளம்** : ஸ்டீல் ஹவுஸ் - 0716 313 313. **இரத்தினபுரி** மற்றும் **எம்பிலிபிட்டிய** : வரையறுக்கப்பட்ட குளோபல் சோன் (தனியார்) நிறுவனம். - 0722 301 022. **அம்பாறை** : வரையறுக்கப்பட்ட மொபிலிக்ஸ் லங்கா (தனியார்) நிறுவனம். - 0718 000 888. **அநுராதபுரம்** : வரையறுக்கப்பட்ட யுனிவர்சல் செலுலர் (தனியார்) நிறுவனம். - 0714 893 708. **மட்டக்களப்பு** : வரையறுக்கப்பட்ட மெக்ஸ் லங்கா (தனியார்) நிறுவனம். - 0715 358 654. **கல்முனை** : அல்பா வீடியோ - 0777 278 867. **குருநாகல்** : வரையறுக்கப்பட்ட யுனிவர்சல் செலுலர் (தனியார்) நிறுவனம்: - 0715 346 938. **மொனராகல** : சுபர்டெக் ஒஃபீஸ் ஒடோமேஷன் - 0777 510 210. **யாழ்ப்பாணம்** : யுனிடெல் - 0750 386 067. **பொலன்னருவ** : மிட்லண்ட் எயார் டெக்னொலஜிஸ் - 0272 222 277. **பதுளை** : நஷனல் என்டர்ப்ரைசஸ் - 0772 337 666. **காலி** : தர்ஷன என்டர்ப்ரைசஸ் - 0777 266 199, **மாத்தறை** : வரையறுக்கப்பட்ட இன்ஃபோமேஷன் அன்ட் டேடா மனேஜ்மன்ற் சிஸ்டம் (தனியார்) நிறுவனம். - 0714 297 546. **திருகோணமலை** : யுனிவர் செல் மொபைல்ஸ் - 0775 556 868. **வவுனியா** :டி மொபைல் - 0777 401 777. **பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள்** : **ஸேம்ஸங் மொபைல் சலுகை பங்காளர்** : வரையறுக்கப்பட்ட மொபைல் மெக்ஸ் (தனியார்) நிறுவனம், ப்ளேடினம் டவர்ஸ், 425, காலி வீதி, கொழும்பு 03. உடன் அழைப்பு 011 5 744 455, சிந்தன ஜிஎஸ்எம் (தனியார்) நிறுவனம்., இல: 101A, ஹைலெவல் வீதி, மஹாரகம. உடன் அழைப்பு : 011 2 850 851, SINGER Mega மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட SINGER Plus அவுட்லட்ஸ். வரையறுக்கப்பட்ட சிங்ககிரி (தனியார்) நிறுவனம், 551, டி.பி.ஜாயா மாவத்தை, கொழும்பு 10, உடன் அழைப்பு: 0115413413. நாடளாவிய அனைத்து ஸேம்ஸங் மொபைல் விற்பனையாளர்கள்.

(சி/3944)

# அகில இலங்கை சைவ மாநாடு மூன்றாம் நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நடத்தும் அகில இலங்கை சைவ மாநாட்டின் 3 ஆம் நாள் காலை நிகழ்வுகள் யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இன்று சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் காலை 9 மணிக்கு திருமுறை ஓதலும் காலை 9.10 மணிக்கு சைவபரிபாலன சபை நிர்வாசபை உறுப்பினர் சைவப்புலவர் கா.கமலநாதனின் வரவேற்புரையும் இடம்பெறும். தொடர்ந்து காலை 9.30 மணிக்கு **சைவ நெறி காட்டும் வாழ்வியல்** என்னும் தொனிப்பொருளில் கருத்தரங்கு இடம்பெறும்.

இதில் **உடல் உள மேம்பாட்டிற்கு** என்னும் தொனிப்பொருளில் கிழக்குப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் எஸ்.முகுந்தன், **ஆன்மீக ஈடேற்றத்திற்கு** என்னும் தொனிப்பொருளில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் மு.கௌரிகாந்தன், **சமூக இணைப்புக்கு** என்னும் தொனிப்பொருளில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், **மனித நேயத்திற்கு** என்னும் தொனிப்பொருளில் சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலய ஆசிரியர் கு.பாலசண்முகம் ஆகியோர் கருத்துரையாற்றவுள்ளனர்.

அத்தோடு காலை 11.30 மணிக்கு முனைவர் நல்லூர் சா.சரவணன் **தமை உடைய தன் உணர்வாய்** என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றுவார்.

மாலை நிகழ்வுகள் சைவ பரிபாலன சபைத் தலைவர் சிவநெறிப் புலவர் த.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் மாலை 4 மணிக்கு திருமுறை ஓதல், தலைமை உரையினைத் தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு **சைவமும் நாமும்** என்னும் தொனிப்பொருளில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு, மாலை 5.30 மணிக்கு **சைவ சித்தாந்த மேம்பாட்டிற்கு ஈழத்தவர்களின் பங்களிப்பு** என்னும் தொனிப்பொருளில் பேராசிரியர் மா.வேதநாதன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

மாலை 6.15 மணிக்கு முனைவர் நல்லூர் சா.சரவணன் நிகழ்த்தும் **மெய்காட்டா மெய்** பற்றிய சிறப்புரை இடம்பெறும்.(ஸ்ரீ-4)

## சாதாரணதர மாணவர்களுக்கான மாபெரும் இலவச கல்விக்கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு அருள் கல்வி வட்டத்தினரால் க.பொ.த. (சா/த) மாணவர்களுக்காக நடத்தப்படும் மாபெரும் இலவச கல்விக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை யாழ்.வீரசிங்க மண்டபத்தில் நடைபெறும்.மேற்படி கருத்தரங்கில் கடந்த 14 வருடத்திற்கான கணித பாட வினாவிடை புத்தகமும் அனைத்து பாடங்களுக்குமான கடந்த மூன்று வருடங்களுக்கான பரீட்சை வினாவிடை புத்தகமும் இலவசமாக வழங்கப்படும்.

மேலும் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்,தமிழ்,வரலாறு ஆகிய பாடங்களுக்கான கையேடும் இன்னும் பல பயிற்சி புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 0786171637 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி விபரங்களை பெற முடியும் என அறிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## வாரம் ஒரு தகவல்

### மூளையின் பயன்பாடு

"நான் ஒரு விடயம் சொல்லுகிறேன்... அது உண்மையா இல்லையா என்பதை நீங்கள்தான் சொல்ல வேண்டும்!"

"சொல்லுங்கள்!"

"எங்களிடம் இருக்கின்ற மூளையை நாங்கள் முழுமையாக உபயோகிப்பதில்லை என்கிறேன்!"

"உண்மைதான்... ஒரு சராசரி மனிதன் தன் மூளையிலே கொஞ்ச பகுதியைத்தான் உபயோகிக்கிறான். இன்னும் உபயோகிக்க வேண்டிய பகுதி நிறைய இருக்கிறது!"

"பார்த்தீங்களா... அப்படி இருக்கும்போது... எனக்கு அது ஞாபகமில்லை... இது ஞாபகமில்லை என்று வேறு சொல்லிக்கொண்டிருக்கிறோம்!"

"ஒரு சராசரி மனிதன் தன் மூளையிலே 90 ஆயிரம் கோடி வார்த்தைகளை வைத்திருக்க முடியும்!"

"அடேங்கப்பா...!"

"நாம் படிப்பது மனதில் பதிய வேண்டும் என்றால் நாம் அதைப் படித்த பின்னர் மனதிலே இருத்தி ஒரு பத்து நிமிடமாவது அசை போட வேண்டும்!"

"காலை நேரத்திலே படிப்பது நல்லதா?"

"மூளையின் செயலாற்றும் திறன் (Efficiency) ஒவ்வொரு மணிக்கு (Hour) மாறுபடுகிறது. காலையிலே சுறுசுறுப்பு... மதியத்திலே மந்தம்... உடம்பு சோர்ந்து போகும்போது மூளையும் சோர்ந்து போய்விடுகிறது! அவ்வப்பொழுது ஓய்வு கொடுத்து அதை உபயோகப்படுத்த வேண்டும்!"

"இது மனநோய் மருத்துவமனை தானே!"

"ஆமாம்!"

"உங்களை சந்தித்ததில் மிகவும் மகிழ்ச்சி டாக்டர்! உங்களிடம் இவ்வளவு தூரத்துக்கு கேள்வி கேட்டதாலே என்னை ஒரு மன நோயாளிஎன்று நீங்கள் தவறாக புரிந்துகொள்ளக்கூடாது!"

"இவ்வளவு தூரத்திற்குப் பதில் சொன்னதால் நீங்களும் என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது... நான் டாக்டர் இல்லை!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## கட்டாக்காலி நாய்களின் தொல்லை

(அச்சுவேலி)

நெல்லியடி பொதுச் சந்தையில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகரித்துள்ளது. இதனால் சந்தைச் சுற்றாடல் அசுத்த மாவதுடன் பிரதான வீதிக்குக் குறுக்கே பாய்வதனால் வாகன ஓட்டுநர்கள் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

இதனை உரிய தரப்பினர் கட்டுப்படுத்த வேண்டுமென பாதிக்கப்பட்டோர் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-4-70)

## வரலட்சுமி விரதம்

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் வரலட்சுமி விரதத்தை முன்னிட்டு எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வரலட்சுமி பூசையும் அதனைத் தொடர்ந்து அடியார்களுக்கு வரலட்சுமி காப்பும் வழங்கப்படும். (ஸ்ரீ-2)

## முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீ கணேசா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு முன்பள்ளி முன்றலில் ஸ்ரீ கணேசா சனசமூக நிலையத் தலைவர் ச.க.முருகையா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச சபை செயலாளர் திருமதி. ஜெயந்தா சோமராஜ் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (எ-2)

## இராசி பலன்

07.08.2011
(ஆடி 22, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05மணிக்கு
அட்டமி காலை 7.14 மணிவரை
நவமி பின்னிரவு 5.09 மணிவரை
விசாகம் முன்னிரவு 7.59 மணிவரை
இராகுகாலம் 4.34-6.04 மணிவரை
சுபநேரம் 9.04-10.34 மணிவரை
அட்டமி-நவமி

**மேடம்** புகழ் கூடும் நாள், பொருட் சேர்க்கையுண்டு, வருங்கால நலனுக்காக சேமிக்க நினைப்பீர்கள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், சான்றோர் சந்திப்பு இடம்பெறலாம்.

**இடபம்** கல்யாணக் கனவுகள் நனவாகலாம், கரைந்த சேமிப்புக்களை ஈடு செய்யும் நிலை உருவாகலாம், தொழில் விருத்திக்காக பாடுபடுவீர்கள்,சுவாரஸ்யமான நாள்.

**மிதுனம்** தொழில் முன்னேற்றம் ஏற்படும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, விருந்து விழாக்களில் கலந்து சிறப்படையும் நாள், தெய்வ சிந்தை மேலோங்கும்.

**கடகம்** வாகன சுகத்தால் வளர்ச்சி காணும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், கொடுக்கல்-வாங்கல்கள் நலன் கருதி வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள்.

**சிங்கம்** ஆதாயம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், சகோதர ஒற்றுமை பலப்படும், போசன சுகமுண்டு.

**கன்னி** வாக்கு வாதங்களைத் தவிர்ப்பதன் மூலம் வளர்ச்சி கூடும் நாள், வியாபாரத்தை விரிவுபடுத்த நடவடிக்கை எடுப்பீர்கள், குடும்பத்தில் நீண்ட நாட்களாக தடைப்பட்ட சுப காரியங்கள் கைகூடலாம்.

**துலாம்** பக்கபலமாக நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பணப்பிரச்சினைகள் தீரும், பெண்கள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகளுக்காக செலவு செய்து மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்** தெய்வ சிந்தனை மேலோங்கும் நாள், தொழில் வளர்ச்சி கூடும், சேமிப்பு உயரும், உறவினர் சில தேவைக்காக சற்று அலைச்சல்கள் அதிகரிக்கலாம்.

**தனுசு** தூர தேசத்திலிருந்து அனுகூலச் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி மேலோங்கும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், தொழில் தொடங்கும் முயற்சிக்கு வித்திடுவீர்கள்,மதிப்பும் மரியாதையும் உயரும்,சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள்.

**கும்பம்** ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள்,வீண்பழிகள் அகலும், தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல்கள் குறையும்,பக்கபலமாக நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**மீனம்** கவலைகள் தீர கதிரவனை வழிபட வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை,போசன சுகமுண்டு.

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 75 | 70-80 |
| பச்சைமிளகாய் | 70 | 80 |
| தக்காளி | 35 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 |
| கோவா | 40 | 45 |
| கரட் | 50 | 70 |
| பூசணி | 25 | 30 |
| புடோல் | 30 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 |
| சின்ன வெங்காயம் | 80 | 60 |
| பெரிய வெங்காயம் | 65 | 40 |
| பாகற்காய் | 80 | 90 |
| வெண்டிக்காய் | 50 | 40 |
| கரணைக்கிழங்கு | -- | 110 |
| பயற்றங்காய் | 80 | 120 |
| லீக்ஸ் | 50 | 40 |
| பீற்றூட் | 30 | 30 |
| கறிமிளகாய் | 50 | 60 |
| முருங்கைக்காய் | 100 | 90 |
| போஞ்சி | -- | 110 |
| கத்தரி தம்புள்ள | 35 | 40 |
| கீரை - 1 பிடி | 8 | 30 |
| தேசிக்காய் | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 |

# வடக்கில் மீள்குடியேறிய முஸ்லிம் மக்களுக்கும் வீடமைப்புத் திட்டத்தை வழங்க முன்வர வேண்டும்

## இந்தியாவிடம் அமைச்சர் றிசாட் கோரிக்கை

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட நிலையில் மீண்டும் தமது தாயக பிரதேசத்தில் மீள்குடியேறும் முஸ்லிம் மக்களுக்கு தேவையாகவுள்ள வீடமைப்புத் திட்டங்களை ஏற்படுத்தி தருமாறு கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீன் இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டேலிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்திய சபாநாயகர் மீராகுமாரின் அழைப்பின் பேரில் கடந்த 3 ஆம் திகதி இலங்கையிலிருந்து சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் குழுவில் அமைச்சர் றிசாட் பதியுதீனும் இடம் பெற்றிருந்தார்.

அக்குழுவினர் இந்திய ஜனாதிபதியைச் சந்தித்த போது,

வடக்கில் முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்கு பெரிதும் தடையாகவுள்ள காரணிகளில் பிரதானமானது வீட்டுப் பிரச்சினையாகும் என அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு இந்தியா 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க முன்வந்தமைக்கு நன்றி தெரிவிப்பதாகக் கூறிய அமைச்சர் றிசாட் பதியுதீன், மேலதிகமாக முஸ்லிம்களது மீள்குடியேற்றத்துக்கு 30 ஆயிரம் வீடுகள் தேவைப்படுவதாகவும் அதனை பெற்றுத் தருவதற்கு ஆவன செய்யுமாறும் ஜனாதிபதியிடம் கோரிக்கையொன்றை முன் வைத்தார்.

அதேவேளை இந்திய அரசாங்கம் வழங்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவித் திட்டங்களில் வடமாகாண முஸ்லிம்களும் உள்வாங்கப்படுவதன் அவசியத்தையும் அமைச்சர் றிசாட் பதியுதீன் இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டேலிடம் எடுத்துரைத்துள்ளார்.

இந்திய அமைச்சரவையில் சுகாதார அமைச்சராகவுள்ள குலாம் நபி ஆஸாத்தையும் சந்தித்து முஸ்லிம்களது மீள்குடியேற்றத்துக்கு இந்திய அரசாங்கத்தின் பங்களிப்பை பெற்றுத் தருமாறு அமைச்சர் றிசாட் பதியுதீன் வேண்டுகோள் விடுத்தார். இதை ஏற்றுக் கொண்ட அமைச்சர் குலாம் நபி ஆஸாத் அதற்கான உதவிகளை பெற்றுத் தருவதற்கான நடவடிக்கையினை முன்னெடுப்பதாகவும் அமைச்சரிடம் உறுதியளித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கசிப்பு வைத்திருந்த நபருக்கு அபராதம்

கசிப்பினை வைத்திருந்த தர்மபுரவாசிக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் 6 மாத கால சிறைத்தண்டனையையும் வழங்கி கிளிநொச்சி நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

கிளிநொச்சி தர்மபுரப் பகுதியில் 168 போத்தல் கசிப்பை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கிளிநொச்சிப் பொலிஸாரால் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் முன்நிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி, குறித்த சந்தேக நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு மேற்படி அபராதத்தையும் செலுத்தத் தவறின் சிறைத் தண்டனையையும் அனுபவிக்க வேண்டுமென தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-4-24)

# சென்னையிலுள்ள இலங்கை சுற்றுலா பயணிகளுக்கான பாதுகாப்பு அதிகரிப்பு

இலங்கை யாத்திரிகர் சிலர் சென்னையில் அச்சுறுத்தப்பட்டதையடுத்து சென்னைக்குச் செல்லும் இலங்கை சுற்றுலாப் பயணிகளுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

எக்மோரின் கென்னத் லேனிலுள்ள மஹாபோதி நிலையத்தைச் சூழ ரோந்து நடவடிக்கைகளை பொலிஸார் பலப்படுத்தியுள்ளனர். அத்துடன் புலிகளின் அனுதாபிகள் மற்றும் இலங்கையர்களின் செயற்பாடுகளை கண்காணித்துவரும் கியூ பிரிவினரும் பொலிஸாருடன் இணைந்து கண்காணிப்புக்களை மேற்கொண்டுள்ளனர். இலங்கையர்கள் அதிகமாக செல்லும் தி.நகர் போன்ற பகுதிகளிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மஹாபோதி நிலையத்தைச் சேர்ந்த வணமஹா நாமதேரர் இது தொடர்பாக கூறுகையில், இப்போது அமைதி நிலவுகிறது. பொலிஸாரின் பிரசன்னத்தையடுத்து யாத்திரிகர்கள் பாதுகாப்பாக உணர்கின்றனர். கியூ பிரிவினர் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர் தாக்கப்பட்ட குழுவினர் கொழும்புக்கு புறப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

இந்நிலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பாக சென்னையிலுள்ள இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகர் வடிவேல் கிருஷ்ணமூர்த்தி திருப்தி தெரிவித்துள்ளார். மேற்படி சம்பவம் துரதிர்ஷ்டவசமானது. இலங்கை யாத்திரிகர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியமைக்காக தமிழ்நாடு அரசாங்கத்திற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம் என அவர் கூறினார். (ஸ்ரீ-2)

# நல்லைக் கந்தன் பாமாலை



நல்லூர் கந்தசுவாமி ஆலய
மஹோற்சவத்தையொட்டி 'வலம்புரி'
வருடந்தோறும் வெளியிடும்
'நல்லூர்க்கந்தன் பாமாலை'
பகுதிக்கு கவிதைகள் எதிர்பார்க்கப்
படுகின்றன. உங்கள் கவிதைகளை
'நல்லைக்கந்தன் பாமாலை' 'வலம்புரி'
இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்.

குறிப்பு:- கவிதைகள் எட்டு (8) வரிகளுக்கு மேற்படாமல் அமைவது சிறப்பானது.



# நல்லூர் ஆலய சூழலில்...

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீக சிந்தனையுடன் நடத்தும் சமய சொற்பொழிவுகளும் கலைநிகழ்வுகளும் மாலை 3 மணி முதல் 6 மணி வரை நடைபெறவுள்ளது.

இதில் 4 ஆம் திருவிழாவான இன்றைய நிகழ்வில் இந்துமத விழுமியப் பண்புகள் பற்றி எஸ். பாலச்சந்திரன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

அத்தோடு ஏழாலை ஆத்ம ஜோதி அறநெறிப் பாடசாலை மற்றும் ஆவரங்கால் அருள் முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

* * * *

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் 4 ஆவது நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் பாட்டுக்கச்சேரி இடம்பெறவுள்ளது. பாட்டு- பொ. சுபாஸ்சந்திரன் வயலின் - ஏ.ஜெயராமன், ஹார்மோனியம்- என். செல்வச்சந்திரன், மிருதங்கம்- கே.கண்ணாதாசன், தபேலா- ஆர். சிஹாமன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

* * * *

ஆலாபனா (சங்கீதசபா) கர்நாடக இசை விருந்து விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆசியுரையினையும் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் என். ஞானகுமாரன் சிறப்புரையையும் வழங்கவுள்ளனர்.

இங்கு இரு இசைவிருந்துகள் இடம் பெறவுள்ளன. முதலாவது இசைவிருந்தில் ஜேர்மன்- நிருஜன்- செகசோதி- வயலின், ஏ. ஜெயராமன்- வயலின்,என். மாதவன்- மிருதங்கம், எஸ். செந்தூரன்- முகர்சிங் ஆகியோர் இதில் பங்கு கொள்ளவுள்ளனர்.

இரண்டாவது இசைவிருந்தில் ஏ.கே.கருணாகரன்- பாட்டு, ஜேர்மனி- நிருஜன்- ஜெகசோதி- வயலின், என். மாதவன்- மிருதங்கம், எஸ். செந்தூரன்- முகர்சிங் ஆகியோர் இதில் பங்கு கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-4)

# ரிக்கெற் பெறாத பயணிகளுக்கான அபராத தொகை அதிகரிக்கும்

இலங்கை போக்குவரத்துச்சபைக்கு சொந்தமான பஸ்களில் ரிக்கெற் பெறாமல் பயணம் செய்பவர்களுக்கான அபராதமும் பயணிகளுக்கு ரிக்கெட் வழங்காத பஸ் நடத்துநர்களுக்கான அபராதமும் அதிகரிக்கப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது இலங்கை போக்குவரத்துச் சபைகளுக்குச் சொந்தமான பஸ்களில் ரிக்கெற் இன்றி பயணம் செய்பவர்களுக்கு 250 ரூபாவுடன் கட்டணத்தின் இரு மடங்கு தொகையும் அபராதமாக விதிக்கப்படுவதாக போக்குவரத்து பிரதியமைச்சர் ரோஹன திசாநாயக்க கூறினார். இந்த அபராதம் 500 ரூபாவும் குறித்த பஸ் கட்டணத்தின் இரு மடங்காகவும் அதிகரிக்கப்படவுள்ளது.

ரிக்கெற் வழங்காத பஸ் நடத்துநர்களுக்கான அபராதமும் அதிகரிக்கப்படவுள்ள போதிலும் அது எந்தளவு அதிகரிக்கப்படும் என இன்னும் தீர்மானிக்கப்படவில்லை எனவும் பிரதியமைச்சர் கூறினார்.

அதேவேளை தனியார் பஸ்களுக்கான அபராதத்தை அதிகரிப்பதற்கான திட்டம் இப்போது இல்லை என போக்குவரத்து ஆணைக்குழுவின் தர உத்தரவாத பணிப்பாளர் சந்திரசிறி விஜேசேகர தெரிவித்தார்.

தனியார் பஸ்களில் ரிக்கெற் வழங்காத நடத்துநர்களுக்கான அபராதம் ஆயிரத்து 500 ரூபா முதல் 15ஆயிரம் ரூபா வரை உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். நான்கு தடவைகளுக்கு மேல் ரிக்கெற் விநியோகிக்காமல் விட்டால் குறித்த பஸ் சேவைக்கான அனுமதி இரத்துச் செய்யப்படும் எனவும் அவர் கூறினார். (எ)

# கஞ்சா வைத்திருந்த நபருக்கு பத்து ஆயிரம் ரூபா அபராதம்

(கரவெட்டி)

கஞ்சாவை வைத்திருந்த நபர் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதமும் ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையையும் வழங்கியதுடன் 10 வருடத்திற்குள் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனையையும் அனுபவிக்க வேண்டுமென கிளிநொச்சி நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

கிளிநொச்சி திருமுறிகண்டிப்பகுதியில் சம்பவதினம் தன்வசம் கஞ்சாப் பொதிகளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த நபர் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் மேற்படி அபராதத்தையும் கடூழியச் சிறைத் தண்டனையையும் அனுபவிக்க வேண்டுமென தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-4-24)

# சுற்றுலாப் பயணிகளுக்கு கிராம புறங்களில் தங்குமிட வசதிகள்

சுற்றுலாப் பயணிகளுக்கு தங்கள் வீடுகளில் தங்குமிட வசதிகளை வழங்கும் பொருட்டு 390 பேர் விண்ணப்பித்துள்ளதாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

விண்ணப்பித்துள்ளவர்களின் வீடுகளின் தரம் பரிசோதிக்கப்பட்ட பின்னர் எதிர்காலத்தில் அதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சுற்றுலாப் பயணிகளுக்கு கிராமப் புறங்களில் தங்குவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் ஹோம் ஸ்டே எனும் பெயரில் அண்மையில் அரசாங்கம் விசேட திட்டமொன்றை ஆரம்பித்தது.

சுற்றுலாப் பயணிகளுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு விரும்புகின்ற கிராமப்புறங்களின் வீட்டுரிமையாளர்கள் இதற்கென விண்ணப்பிக்க முடியுமென அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# நல்லூரான் திருவடிக்கு இன்று 4ஆம் திருவிழா



## உமை மைந்தா ஓடி வா

புவி வாழும் தமிழரின்
தனிப்பெரும் இறைவனே முருகா
எமக்கு நற்செய்தி கொண்டுவா-
துன்பத்தில் தவிக்கின்றோம் தினமும்
எம்துயர் துடைக்க ஓடிவா
தடைகள் யாவும் உடைக்க ஓடிவா
கவிமூலம் கருத்துரைக்கின்றோம்
கயமை ஒழிக்கவே கந்தனே ஓடிவா-
கரம் குவித்தோம் சிரம் தாழ்த்தினோம்
உன்முன்னே உமை மைந்தா ஓடிவா

மயிலையூரான்

## நல்லருள் தருவான் நல்லைக் கந்தன்

பரமசிவன் நெற்றிக் கண்ணின் பொறிகள் ஆறு
சரவணப் பொய்கையில் விழுந்தன -அன்று
தாமரை மலர்கள் மீது விழுந்த பொறிகள் ஆறும்
தெய்வக் குழந்தைகளாக மலர்கள் மீது மிதந்தன- என்று
பார்வதிதேவி அணைத்தாள் ஒன்றாய்
ஆறுமுகப் பெருமான் தோன்றினான்- நன்று
சூரனை அழிக்க அவதாரம் செய்தான் வேலன்
எமது பாவங்களை அழித்து நல்லருள் தருவான்-நல்லைக்கந்தன் இன்று

சொக்கலிங்கம் தர்மகுலசிங்கம், நாயன்மார்க்கட்டு

## வரலாற்றின் நாயகனே...

உலகம் உய்ந்திட உன்கழல்
வேண்டியே
கலகம் ஒய்ந்த மண்ணில் அமைதி
நிலவிடவே
பக்தியும் ஞானமும் தமிழினில்
இசைத்திடவே
தவழும் பொன்நிறமேனியில்
தரிசனம் தருபவனே
கலையும் நயமும் கவின்பட
ஒலித்திட
வலம்வரும் வல்லவனே வடிவேல்
முருகனே
வரந்தந்து வாழ்வளிப்பாய் வரலாற்றின்
நாயகனே

க.நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்.

## நன்மை பெருக வேண்டும் முருகா!

அழகுத் தமிழ்பேசும் அழகனே முருகா
அன்பனுக்கு அன்பனாக வருபவனே முருகா
நல்லைப் பதியுறையும் நிமலனே முருகா
நல்லபல வரமருளும் கொடையோனே முருகா

ஜெயவானுஜன், யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி


விழிவொன்று தருவாயே வடிவேலனே!



ஈஸ்வரபகவான் அன் கம்பனி
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# அமெரிக்காவின் வெற்றிக்குப் பின்னால் சிறப்பு அதிரடிப் படையின் அசத்தல்

ஒசாமா பின்லேடன் அபோதாபாத்தில் அமெரிக்க அதிரடிப் படைவீரர்களால் கொல்லப்பட்டபோது அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா இப்படி அறிவித்தார். “அமெரிக்கா எதைச் செய்ய நினைக்குமோ... அதைச் செய்து முடிக்கும்!” ஒபாமாவின் இத்தனை உறுதியான பேச்சுக்குக் காரணம்... சீல்!

கடல், காற்று, நிலம் என்று மூன்றிலும் அதிவேகமாகச் செயற்படும் அமெரிக்க கடற்படையின் சிறப்பு அதிரடிப்படைதான்... சீல். Sea, Air, Land ஆகியவற்றின் சுருக்கம்தான் SEAL. இரண்டாம் உலகப்போரின் போது ஏற்பட்ட அனுபவங்களால் எதிரி - நண்பன் எனப் பாரபட்சம் காட்டாமல் அனைத்து நாடுகளுக்குள்ளும் மூக்கை நுழைக்க வேண்டிய அவசியம் குறித்து யோசித்தது அமெரிக்கா. அதைத் தொடர்ந்து வியட்நாம் போரின் போது உருவாக்கப்பட்ட அமைப்புதான் சீல். மூக்கை நுழைப்பது என்பது அடுத்த நாடுகளின் நிலவரங்களைத் தெரிந்துகொள்வது மட்டும் அல்ல. படுகொலை, சதித்திட்டங்கள் செய்வதன்மூலம் அரசியல் நிலைமைகளை அமெரிக்காவுக்குச் சாதகமாக மாற்றி அமைப்பதும்கூட. பிற நாடுகளின் எல்லைப்புறத்தில் நுழைந்து அதிரடித் தாக்குதல் நடத்துவது, எதிரி நாட்டு முக்கிய தலைவர்களைக் காலி செய்வது ஆகியவற்றை நோக்கமாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட சீல், பின்நாட்களில் தீவிரவாதிகளைக் கொல்வது, போதைக் கடத்தல்காரர்களைப் போட்டுத்தள்ளுவது, பணயக் கைதிகளை விடுவிப்பது, விமானக் கடத்தலைத் தடுப்பது எனப் பல்வேறு பணிகளுக்காக விரிவாக்கப்பட்டது. உலகின் எந்த நாட்டு அதிரடிப்படைகளையும்விட சீல் வீரர்களுக்கு மிக



மிகக் கடினமான பயிற்சி கொடுக்கப்படும்.

முதல் பயிற்சி தண்ணீரில் ஆரம்பிக்கும். நீச்சல் குளத்தில் தரை மட்டத்திலிருந்து ஒரு அடி உயரத்தில் கட்டப்பட்ட கயிறுகளுக்கு அடியிலேயே நீந்துவது முதல் பயிற்சி. ஆழ்கடலில் ஒட்சிசன் சிலிண்டர் இல்லாமல் நீந்துவது உச்சக்கட்டப் பயிற்சி. வெறும் இறப்பர் படகில் துடுப்பைப் போட்டு அலையை எதிர்த்துக் கடலுக்குள் செல்ல வேண்டும். அடிக்கின்ற அலைக்குப் படகிலிருந்து பல தடவைகள் தூக்கி எறியப்பட்டாலும் இலக்கை அடையாமல் கரை திரும்பக் கூடாது. பாறைகளில் மோதாமல் தங்களைக் காப்பாற்றிக்கொள்வது அவரவர் பொறுப்பு. தோல்வியடைந்து திரும்பினால் கடும் தண்டனை காத்திருக்கும். அலையில் சறுக்கிக் கொண்டே (Sea Surfing) கரையிலிருக்கும் இலக்கைத் துல்லியமாகச் சுட வேண்டும். ஆழ்கடலில் பயிற்சியளிக்கும் போது கொமாண்டர் ஒருவர் சத்தமில்லாமல் ஒட்சிசன் சிலிண்டர் மூடிகளைக் கழற்றிவிடுவார். பதற்றப்படாமல் அதை மாட்டி, இருக்கும் கொஞ்ச நஞ்ச ஒட்சிசனைச் சுவாசித்து மேலே தப்பித்து வர வேண்டும். கிட்டத்தட்ட உயிர் போய் உயிர் வரும். முடியவில்லை என்றால் மயங்கியதும் ஒட்சிசன் கொடுத்து மேலே கூட்டி வந்து, ‘போய்ட்டு வா தம்பி!’ என்று துரத்திவிடுவார்கள். ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும் ஹெலிகொப்டரில் இருந்து பரசூட் மூலம் இறப்பர் படகோடு கடலில் குதித்து, அதில் கரைக்குப் போய் காரியத்தை முடித்து, மீண்டும் கடலில் வந்து தண்ணீர் தொட்டுப் பறக்கும் ஹெலிகொப்டரில் படகை லோட் செய்யும் வரை சீல் வீரர்கள் செய்யும் ஒவ்வொரு சாகசமும் ஜேம்ஸ்பாண்ட் படக் கதாசிரியர்களால்கூடக் கற்பனை செய்ய முடியாதவை!

## அமெரிக்கா எதை நினைக்குமோ அதைச் செய்து முடிக்கும்

நிலம் என்பதைப் பனிமலை, பாலைவனம், காடு, பள்ளத்தாக்கு, சுரங்கம் என்று பிரித்துப் பயிற்சி கொடுப்பார்கள். பனிமலையில் மிகக் குறைந்த உடைகளோடு உயிர் பிழைக்க வேண்டும். முடியவில்லை என்றால் சக வீரரை நிர்வாணமாகக் கட்டிப்பிடித்து வெப்பம் ஏற்றிக் கொள்ள வேண்டும். சுரங்கத்தில் ஒரு லீற்றர் தண்ணீர்ப் போத்தலோடு இரண்டு நாட்கள் தாக்குப் பிடிக்க வேண்டும். தண்ணீர் தீர்ந்துவிட்டால் தண்ணீர் இருக்கும் இடத்தைத் தேடிக் கண்டுபிடித்துத் தாகம் தீர்த்துக்கொள்ள வேண்டும். யாரும் யாருக்கும் உதவமாட்டார்கள். இப்படி சீல் வீரர்களுக்குக் கொடுக்கப்படும் பயிற்சிகள் எல்லாமே மரண விளையாட்டுகள்தான்.



ஒரு நாளைக்கு நான்கு மணிநேரம் தூங்க அனுமதி. அதிலும் நின்றுகொண்டே தூங்கவும் பயிற்சி கொடுப்பார்கள். சீல் பிரிவில் இருக்கும் ஒவ்வொரு வீரருக்கும் நாடுகளின் பூகோள அமைப்புகள் தெரியும். விமானம் இயக்கத் தெரியும். அதிலிருந்து குதிக்கத் தெரியும். படகு ஓட்டத் தெரியும். மரம் ஏறத் தெரியும். காட்டாற்றில் நீந்தத் தெரியும் முதலுதவி செய்யத் தெரியும். வயர் லெஸ் இயக்கத் தெரியும். எந்த ஆயுதமும் இல்லாத போது கைவிரல் அளவு கத்தியை வைத்து எதிரியின் கழுத்தைச் சீவத் தெரியும். இல்லையென்றால் கைவிரல்களை மட்டும் வைத்து சங்கை உடைத்து கதையை முடிக்கத் தெரியும். விலங்குகளின் குணநலன்கள் தெரியும். ‘நேற்று மட்டும்தான் எளிதான நாள். வெற்றி பெறுவதற்கு நிறைய விலை கொடுக்க வேண்டும்.’ இதுதான் சீல் வீரர்களின் மனதில் பதிய வைக்கப்படும் கருத்து.

சீல் வீரர்கள் பெரும்பாலும் பகலில் தூங்கி, இரவில் பயிற்சி எடுப்பார்கள். ஏனெனில் அவர்களுடைய ஒபரேஷன் பெரும்பாலும் நள்ளிரவில்தான் இருக்கும். அப்போதுதானே எதிரிகள், மக்கள் தூங்கிக்கொண்டிருப்பார்கள்.

எப்போதும் ஒபரேஷன் முடிந்ததும் தடயங்களை அழித்துவிட்டு, அங்கே இருக்கும் தடயங்களைச் சேகரித்துக் கொண்டு 20 நிமிடங்களில் இடத்தைக் காலி செய்துவிட வேண்டும் என்பது சீல் வீரர்களுக்கான விதி. இதனால்தான் ஒசாமா ஒபரேஷனில் ரிப்பெயரான ஹெலிகொப்டரைக் குண்டுவைத்துத் தகர்த்தார்கள்.

### யானைக்கே அடி சறுக்கும்போது சீலுக்கும் மட்டும் சிக்கல் வராமல் இருக்குமா?

2005இல் ‘ஒபரேஷன் ரெட் விங்ஸ்’ என்று பெயரிட்டு ஆப்கானிஸ்தானுக்குக் கிளம்பிச் சென்றார்கள் சீல் வீரர்கள். ‘அகமது ஷா’ என்கிற தலிபான் கமாண்டர் ஒருவரைக் காலி செய்வதுதான் அசைன்மென்ட். எம்.எச்.47 என்கிற மெகா சைஸ் ஹெலிகொப்டரில் கிளம்பிச் சென்றது இருபது பேர் கொண்ட சீல் படை. தலிபான்களில் ‘மலைப்புலிகள்’ என்று ஒரு குரூப் உண்டு. தோராபோரா மலையில் உட்கார்ந்துகொண்டு ரொக்கட் லோஞ்சர்கள் மூலம் அந்தப் பகுதியில் பறக்கும் பாகிஸ்தான், அமெரிக்கப் போர் விமானங்களைச் சுட்டு வீழ்த்துவது அவர்களின் பொழுதுபோக்கு.

எக்கச்சக்க சத்தத்தோடு பறந்த எம்.எச்.47 ஐ சுலபமாகப் போட்டுத்தள்ளினார்கள் தலிபான்கள். ஒரு வீரரைத் தவிர மற்ற அனைவரும் அவுட். வியட்நாம் போருக்கு அடுத்தபடியாக இந்த ஒபரேஷனில்தான் அதிக வீரர்களை இழந்தது சீல்.

சீலுக்கு ஆயுதங்கள் தயாரிப்பதற்கு என்றே தனி ஆயுதத் தொழிற்சாலை உண்டு. ‘ரெட் விங்ஸ்’ ஒபரேஷனில் பட்ட சூட்டை அமெரிக்கா அவ்வளவு சீக்கிரம் மறக்கவில்லை.

ஒசாமா என்கவுண்டருக்காக அதிக சத்தம் வராதபடி ‘பிளாக் ஹாக்’ ஹெலிகொப்டர்களை வடிவமைத்தார்கள். ஒன்றுக்கு மூன்று ஹெலிகொப்டர்களை அனுப்பிவைத்தார்கள். பாகிஸ்தான் ரேடரில் சிக்காதபடி மிகத் தாழ்வாகப் பறந்தார்கள். ஒசாமா வீட்டு மொட்டை மாடியில் இறங்கினார்கள். 20 நிமிடங்களில் காரியத்தை முடித்தார்கள். அடுத்த அரை மணிநேரத்தில் பாகிஸ்தான் இராணுவம் சுதாரித்து போர் விமானங்களை அனுப்பிய போது அங்கே யாருமில்லை.

இப்போது அல்கொய்தாவின் அடுத்த தலைவர் அல் ஜவாஹிரியை அழிக்க நேரம் பார்த்துப் பயிற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் சீல் வீரர்கள்.

ஒசாமா மரணத்திற்குப் பழிவாங்கும் விதமாக அமெரிக்கர்களை எப்படித் தாக்கலாம் என்று திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார் அல் ஜவாஹிரி. இப்போதைக்கு இருதரப்பிலும் யாருக்கும் நிம்மதியான தூக்கம் கிடையாது!

ஜூனியர் விகடன்




யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயத்தில் தரம் 5 மாணவர்களுக்கான சுற்றாடல் சார் செயற்பாட்டு முகாம் அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்வி அமைச்சின் முன்னாள் தமிழ்மொழிப்பிரிவு பணிப்பாளரும் கோப்பாய் நவமங்கை நிலைய ஸ்தாபகருமான சுவர்ணா நவரட்ணம் நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதையும் மாணவர்களின் செயற்பாடுகளை ஆசிரிய ஆலோசகர் திருமதி டொறிங்ரன் மேற்பார்வை செய்வதையும் படங்களில் காணலாம்.

# சன் சீ கப்பல் பயணியை நாடு கடத்தக் கூடாது

## குடிவரவு, குடியகல்வு பிரிவு நீதிவான் தீர்ப்பு

சன் சீ கப்பலின் மூலம் கனடாவில் புகலிடம் கோரிய நபர் ஒருவரை நாடு கடத்த வேண்டும் என அரசு பணித்தபோதிலும் அவரை நாடு கடத்தக்கூடாது என குடிவரவு, குடியகல்வு பிரிவு நீதிவான் தீர்ப்பளித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் குறித்த இலங்கைத் தமிழரை நாடு கடத்தவேண்டுமென முன்னர் கனேடிய அரசாங்கம் உத்தரவிட்டிருந்தது. எனினும் கனேடிய அரசாங்கத்தின் இந்த உத்தரவை நிராகரித்து அந்நாட்டு குடிவரவு, குடியகல்வு பிரிவு நீதிவான் மைக்கல் தீர்ப்பு வழங்கியுள்ளார்.

குறித்த சந்தேக நபர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடித் தொடர்புகளைப் பேணியமைக்கான உறுதியான ஆதாரங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை என நீதிவான் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

சந்தேக நபரின் மனைவி முன்னுக்கு பின் முரணான சாட்சியங்களை அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கணவரைக் காப்பாற்ற வேண்டும் என்ற காரணத்தினால் இவ்வாறு தவறான தகவல்களை வழங்கியதாகவும் இதனால் அவரது சாட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கமுடியாது எனவும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

சந்தேகத்திற்கிடமான 8 புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்ந்தும் வன்கூவரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# அமெரிக்க நாடாளுமன்றத்தில் இலங்கைக்கு பலமான ஆதரவு

## அமெரிக்காவுக்கான இலங்கைத்தூதர் தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்க நாடாளுமன்றத்தில் இலங்கைக்கு பலமான ஆதரவு இருப்பதாக அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.

அமெரிக்க காங்கிரசில் 30 இற்கும் அதிகமானோரைக் கொண்ட இலங்கைக் குழுவொன்று உள்ளது. அத்துடன் பல உறுப்பினர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளை நாம் தோற்கடித்தமைக்கும் எமது அபிவிருத்தி மற்றும் நல்லிணக்க முயற்சிகளுக்கும் ஆதரவு தெரிவித்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் சில தொண்டர் நிறுவனங்களும் புலம்பெயர்ந்த புலி அங்கத்தவர்கள் சிலரும் இலங்கையின் நலன்களுக்கு எதிராக செயற்படுவதாக அவர் கூறினார். ஆனால் இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் புறக்கணிக்க முடியாது என அவர் கூறினார்.

இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்க வர்த்தகர்கள் குழுவொன்று இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகள் குறித்து அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டனுக்கு கடிதம் எழுதியுள்ளார். உதாரணமாக போயிங் நிறுவனம் ஸ்ரீலங்கன் எயார்லைன்சுக்கு விமானங்களை விற்பனை செய்யவுள்ளது. ஜோன் டீரே கெட்டபில்லர் போன்ற நிறுவனங்கள் இலங்கையில் காலூன்ற ஆர்வம் கொண்டுள்ளன.

வேறு சிலர் சிறிய தொழிற்சாலைகளை அமைக்க விரும்புகிறார்கள். அமெரிக்காவின் முன்னணி ஹோட்டல் நிறுவனங்கள் பல ஏற்கனவே இலங்கையில் மேற்கொள்ளவுள்ள திட்டங்கள் குறித்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# 50 கிலோ கஞ்சாவுடன் சந்தேக நபர் கைது

சிறைச்சாலைகள் புனரமைப்பு அமைச்சின் செயலாளர் என்ற போலிப் பெயுர் தாங்கிய கெப் வாகனமொன்று ஐம்பது கிலோ கஞ்சாவுடன் சென்ற போது கதிர்காமம் பிரதேசத்தில் வைத்து அப்பகுதி விசேட பொலிஸ் பிரிவினரால் பிடிக்கப்பட்டுள்ளது.

எம்பிலிபிட்டிய பிரதேசத்தின் அரசியல்வாதி ஒருவருக்கு சொந்தமானது என சந்தேகிக்கப்படும் குறித்த கெப் வண்டியின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கதிர்காமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் திஸ்ஸமஹாராம நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதோடு இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருவதாகவும் கதிர்காமம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)

# அரசாங்கத்தின் எழுத்துமூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும்

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையின் படி அரசு எழுத்துமூலம் ஆவணங்களை சமர்ப்பிக்கும். எனவே அரசு-கூட்டமைப்பு பேச்சுக்களை முறிந்து விட்டது எனக் கூறமுடியாது என தேசிய மொழிகள் இன நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அரசு -கூட்டமைப்புக்கு இடையிலான பேச்சுக்கள் தொடர்பாக கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு,

அரச-கூட்டமைப்புக்கிடையிலான பேச்சுகள் ஓரிரண்டு சுற்றுக்கள் சாதகமான பதிலை தரும் என எதிர்பார்க்க முடியாது. கூட்டமைப்பு அரசிடம் சில விடயங்கள் தொடர்பாகவும் தீர்வு குறித்த அரசின் யோசனைகளை எழுத்துமூலம் தரும்படியும் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கான பதிலை அரசு எழுத்து மூலம் வழங்கும் என நான் உறுதியாக நம்புகின்றேன் என்றார். (ஸ்ரீ-2)

# அணுத்தொழில்நுட்ப ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பில் எவ்வித இணக்கப்பாடும் இல்லை

## அமெரிக்க தூதரகம் அறிவிப்பு

இலங்கைக்கு அணுத் தொழில்நுட்ப ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பில் எந்தவொரு இணக்கப்பாடும் எட்டப்படவில்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் எவ்வித பேச்சுவார்த்தையும் நடத்தப்படவில்லை என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கையில் தொடர்ந்து பயன்படுத்தப்படாத இரண்டு கதிர்வீச்சு நிலையங்களை அகற்றுவதற்காக மாத்திரமே அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளதாக குறித்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

அழிவை ஏற்படுத்தக்கூடிய கதிர்வீச்சுடைய பொருட்களை அகற்றும் உலகளாவிய வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அமெரிக்க தூதரகம் குறிப்பிடுகின்றது.

இது தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கும் தமக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ள போதிலும் இது தொடர்பில் இணக்கப்பாடொன்றிற்கு வரவில்லை என்று அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த அமைச்சரவை தீர்மானங்களை வெளியிடும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இது குறித்து வெளியிட்ட தகவலுக்கு பதிலளிக்கும் வகையில் அமெரிக்க தூதரகம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது. (ஸ்ரீ-2)


# மரண அறிவித்தல்

## கந்தர் செல்லையா (செட்டியார்)



புத்தூர் கிழக்கு, குமாரசுவாமி வீதி, புத்தூரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் செல்லையா (செட்டியார்) 04.08.2011 அன்று வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தர் சீதாதேவி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், சின்னாட்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், தெய்வானைப்பிள்ளை, காலஞ்சென் றவர்களான சோதி, பொன்னம்மா, பரமு, சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கந்தையா (கந்தராசா), அன்னலட்சுமி, ஜெயலட்சுமி (ஆசிரியை, புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), கருணானந்தன், பரமசிவம் (கனடா), பஞ்சலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவநேசன் (சட்டத்தரணி), புஸ்பராணி, வசந்தி, மாலா (கனடா), கலா (கனடா), சுரேஸ் (ப.நோ.கூ.சங்கம், தெல்லிப்பளை) ஆகியோரின் அன்பு மாமனாரும், துஸ்யந்தன் (கனடா), கிருசாந்தி (கனடா), தபோதரன் (கனடா), றமேஸ்தரன் (சட்டக்கல்லூரி மாணவன்), கோகிலறாஜ், அனுஷா, யசிதா, கயிதா, நிதுஷா, ஜலிசன் ஆகியோரின் பாசமிகு பேரனும், தேனுஜன் (கனடா), திவ்வியன் (கனடா), நியாசன் (கனடா), றம்சன் (கனடா) ஆகியோரின் அன்புப் பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை (08.08.2011) பி.ப 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

புத்தூர் கிழக்கு,
குமாரசுவாமி வீதி,
புத்தூர்.

(சி-3946)

தகவல்:-
குடும்பத்தினர்

# மற்றொரு கோணம்





## சுயதன்மை உங்களுக்குள் உறுதியாக வேண்டும்

ஸ்கூலிற்குக் கிளம்பும் நேரத்தில்தான் அவசரம் அவசரமாக ஹோம்வேர்க் செய்கின்றன என் குழந்தைகள். எக்ஸாமிற்கும் கடைசி நேரத்தில்தான் படிக்கின்றன. யோசித்துப்பார்த்தால் நானும் கூட என் பள்ளி நாட்களில் அப்படித்தான் இருந்திருக்கிறேன். ஏன் இந்தப்பழக்ககத்தை மாற்றிக் கொள்ள முடிவதில்லை? ( இக் கேள்விக்கான பதில் தொடர் கீழே)

ஈஷாவில் ஒரு பள்ளியைத் துவக்கி இருக்கிறோம். அந்த நோக்கம் அறிவைத் திணிப்பதில்லை.

### ஆன்மீகம் 03

அறிந்து கொள்ளும் தாகத்தைத் தூண்டுவது. அந்தத் தாகம் தூண்டப்பட்டால் மாணவர்கள் சுயவிருப்பத்தின் பேரில் கற்றுக் கொள்ளத் தொடங்குவார்கள். அப்போது அவர்களின் திறமை வெளிப்படும். அதற்கான சூழலை உங்கள் வீட்டிலும் பள்ளிகளிலும் உருவாக்குங்கள். அதுவே போதும்.

என் கணவருக்கு வயது 45. என்மீதும் என் குழந்தைகள் மீதும் அளவுகடந்த பாசம் கொண்டிருந்தார். சமீபகாலமாக அவரது போக்கில் மாற்றம். அவருக்கு வேறொரு பெண்ணுடன் இந்த வயதில் நட்பு ஏற்பட்டு அவள் வீடே கதி என்று கிடக்கிறார். அவரை எப்படி மாற்றுவது? இந்த அபலைக்கு ஒரு வழி சொல்லுங்கள்?

உங்களுக்கு எதிரான ஒன்றை உருவாக்குகிறார் என்றால் உங்களுக்கு அவர்கள் நெருக்கமானவர்களோ, பாசமானவர்களோ இல்லை. எனவே அவர்களை எப்படித் தவிர்ப்பது என்பதையெல்லாம் சொல்வதற்கு நான் இங்கு இல்லை.



ஈஷா சிவலிங்க மண்டபம்

முதலில் அடுத்தவர்கள் எப்படி இருந்தாலும் உங்களுடைய தன்மை, உங்களுடைய உள்த்தன்மை இன்னும் போதுமான அளவு உறுதியாகவில்லை. உங்களுடைய தன்மை என்னவென்றால், உங்களிடம் சிலர் எதைக்கூறினாலும் நீங்கள் அதுவாகவே ஆகிவிடுகிறீர்கள் நான்கு பேர் உங்களை 'முட்டாள்' என்று கூறினால், நீங்கள் அப்படி ஆகிவிடுவீர்கள். ஒருகூட்டத்தில் ஒருவர் அவரை முட்டாள் என்று யாரோ அழைத்ததாக என்னிடம் கூறினார். "யாரோ ஒருவர் அமெரிக்காவில் இருந்து வந்து என்னை முட்டாள் என்று அழைத்தார். வழக்கமாக அமைதியாக இருக்கும் நான் கடந்த ஒரு வாரமாக நொருங்கிப் போய் விட்டேன். நான் அவருக்கு எதிராக வழக்குப் போடத் திட்டமிட்டிருக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் சுவாமிஜி" என்று கேட்டார். யாரோ சொன்ன ஒரு வார்த்தை உங்களுடைய அமைதியை ஒரு வாரகாலத்திற்கு மேலாக சீர்குலைத்து இருக்கிறது. இதற்கு என்ன அர்த்தம்? அப்படியென்றால் அவர் என்ன கூறினாரோ அது உண்மைதானே? உங்கள் உள்த்தன்மை உறுதியாகவில்லை. என்னவெல்லாம் அவர்களுக்குத் தெரியுமோ, அதை அவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையை எந்த வழியில் புரிந்திருக்கிறார்களோ, அப்படியே தங்களை வெளிப்படுத்துகிறார்கள்.

நீங்கள் புத்திசாலியாக இருந்தால் என்ன செய்வது என முடிவெடுக்கக் கூடியவர்களாக நீங்கள் இருக்க வேண்டும். இல்லையா? சுய தன்மை உங்களுக்குள் உறுதியாக இல்லாததால், காற்றடிக்கும் திசைகளில் எல்லாம் நீங்கள் செல்கிறீர்கள். இப்போராட்டங்கள் எல்லாமே அதனால்தான்.

நீங்கள் உங்கள் வீட்டை விட்டு எங்கோ சென்றுவிட்டால் அங்கு வேறு யாரேனும் கூட உங்களுக்கு எதிர்மறையானவற்றைச் செய்ய முடியும். உங்கள் தன்மை உறுதியாகும்போது சார்பில்லாமல் வாழ உங்களால் முடியும்.

உணர்வு ரீதியாக யாரையாவது சார்ந்திராவிட்டால் எங்கள் வாழ்க்கை அர்த்தமற்றது என்கிற தவறான போதனை உங்கள் மனதிற்குள் திணிக்கப்பட்டிருக்கிறது. எனவே, நிர்ப்பந்தங்களாற் பலர் அத்தகைய உறவுகளை ஏற்படுத்திக் கொள்கிறார்கள்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# புனைகதைகளிற் பேச்சுவழக்கு காலாவதியாக வேண்டியதா? 04

"வெறும் நாட்டுப்புறச் சொற்களால், பாமர வார்த்தைகளால் மாத்திரம் மண்வாசனையைக் காட்ட முடியும் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. அந்தப் பிராந்தியத்தின் நடையில் எழுதவேண்டும் என்பதிலும் கிராமியக் கொச்சை மொழிக் கதையை வாசித்து விளங்க இடைஞ்சலாக இருக்கக்கூடாது என்பதிலும் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது."

இலக்கியத்தில் பேச்சு வழக்கு அமைவது தொடர்பாக இத்தகைய கோட்பாட்டினை உடையவர்கள் தமிழகத்திலும் கணிசமான அளவில் உள்ளார்கள். அத்தகைய கோட்பாட்டை பிரதிபலிப்பதாகச் சிறுகதையொன்றில் இடம் பெறும் உரையாடலொன்றை இங்கு நோக்குவோம்.

"நீங்க மாஜிக்கின்னு சொன்னப்போதான் இன்னொன்று நினைப்பு வருது. உங்க இலக்கிய வகையிலே கூட இப்போ ஒருவகை 'மாஜிக்கல் ரியலிஸம்'ன்னு சொல்லி வர்றாங்களே, தெரியுமா உங்களுக்கு அதெப்பத்தி ஏதாவது?"

"ஆமா படிக்கிறவனுக்குப் புரியாம ஒருமாதிரி வார்த்தை சர்க்கஸ் நடத்துற பம்மாத்துத்தான் இப்போ புதுமை, சொல்லக்கூடியதெ நல்ல பாஷையிலே தெளிவா கலைநயத்தோட சொல்லணும். களி மண்ணுலே பொம்மை செய்யும் போது, அது வெறும் மண்ணுங்குறதையும் மீறி உருவ சுத்தம் பளிச்சின்னு இருக்கணும் அப்பொ, அதுமண்ணில்லே, ராமர், கிருஷணர், அனுமார் என்றெல்லாம் பேர்மாறிப் போகுது. அந்த மாற்றம் தான் கலை..." "இலக்கியம்னு ஆரம்பிச்ச ஒடனேயே உங்களுக்கு சுர்னு தர்மரோசம் வந்திடுது ..........நீங்க சொல்ற பாஷை சுத்தம் பார்த்தா இன்னைக்குள்ள வட்டார வழக்கு புதுமை ஒண்ணையுமே வகையிலெ சேக்க முடியாதே... அப்பொ எதார்த்த இலக்கியம் 'ஹோகய' தான் ...."

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

"வட்டார மொழிய அதது வட்டாரப் பாத்திரங்கள்தான் பேசணும். கதை நடத்தும் ஆசிரியனும் வட்டாரக் கொச்சைக்குப் போயிட்டா பாஷை மலினப்பட்டு போயிரும்னு தான் சொல்ல வாறேன்...."

உண்மையில் வட்டார மொழியை உபயோகித்தல் கறாராக அல்லது மிகையாக ஈடுபட்டால் மொழி மலினப்பட்டுவிடும் என்பதல்ல பிரச்சினை. அந்த மொழியை விளங்கிக் கொள்வதற்கு வாசகன் எடுக்கும் சிரத்தையில் படைப்பின் உரிப்பொருளான கருத்தும் உணர்ச்சியும் அடிபட்டுப் போய்விடும் என்பதே பிரச்சினை. முற்றுமுழுக்கப் பேச்சு மொழியிலே, பேச்சுப்பாணியிலேயே எழுதுவதால் உண்டாகும் விளக்கமின்மைக்கான காரணங்கள் முன்னர் கூறப்பட்டன. முக்கியமான பிறிதோர் காரணமும் உண்டு. பேச்சுமொழியின் முக்கியமான ஒரு இயல்பை அறியும் போது அந்த உண்மையினை விளங்கிக் கொள்ளமுடியும்.

"பேச்சு மொழி, எவ்வளவு தேவையான ஒலிகள் போதுமோ அவ்வளவு ஒலிகளைக் கொண்டு இயங்குகிறது. பேசும்பொழுது வாயின் அசைவும் குரலின் ஏற்றத்தாழ்வும், சைகைச் செய்கையும் சூழ்நிலையும் சொல்லும் சந்தர்ப்பமும் பேசும் ஒலிகட்குத் துணை செய்கின்றன. அதனால், குறைந்த ஒலிகள் போதும். மேலும், பேசும்போது கருத்து வேகம் மிகுதி. அதனால் சொற்சிதைவுகளைப் பற்றிப் பொருட்படுத்துவதில்லை."

பேச்சு மொழியாக இருப்பினும் அது எழுத்துக்கு வரும்போது எழுத்து மொழியாகிவிடுகிறது. ஏனெனில் மேற்படி மேற்கோளில் எம்மால் தடித்த எழுத்துக்களிற் காட்டப்பட்ட அம்சம் எதுவும் எழுத்தில் புலப்படுவதில்லை. பேச்சைப் புரிந்து கொள்வதற்குத் துணையான அம்சங்கள் பலவற்றையும் இழந்து, எழுத்தில் அமையும் பேச்சுமொழி, தன்னுடைய ஆற்றலில் கணிசமான பகுதியை இழந்து விடுகிறது என்பதே உண்மை. இப்படியான பல காரணிகளாலேயே எழுத்துக்கு வரும் பேச்சுமொழி விளக்கம் குன்றியதாய் -ஒலி நிலையில் அமைந்திருந்த தன் வீரியத்தில் குன்றியதாய் போய்விடுகிறது.

க.இரகுபரன்

அந்நிலையில் அது கருத்தையும் உணர்ச்சியையும் வெளிப்படுத்தும் ஆற்றலிற் குன்றிவிடுகிறது. இந்த உண்மையை விளங்கிக் கொள்வதற்கு மண்வாசனை இலக்கியம் படைப்பதில் பிரபலம் பெற்ற ஈழத்து எழுத்தாளர் வ.அ.இராசரத்தினத்தின் 'தாய்' என்ற சிறுகதையின் தொடக்கப் பகுதியை நோக்குவோம்.

(தொடரும்)

# ஜனாதிபதியை விமர்சித்த குற்றச்சாட்டில் 12 மாணவர்கள் கொழும்பில் கைது

கொழும்பின் புறநகர்ப் பகுதியான தெஹிவளையிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரில் கல்விகற்கும் 12 மாணவர்கள் நேற்று கொம்பனித்தெரு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் உயர்கல்வி அமைச்சரையும் விமர்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகன்றது.

மாணவர்களின் பிரசார நடவடிக்கை ஒன்றின் போது இவர்கள் பகிரங்கமாக ஜனாதிபதியையும் உயர்கல்வி அமைச்சரையும் விமர்சித்ததாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

(ஸ்ரீ-2)

# 49 பட்டதாரிகள் உபபொலிஸ் பரிசோதகர்களாக நியமனம்

பொலிஸ் சேவையில் 49 பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். வரலாற்றில் முதற்தடவையாக உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்காக பட்டதாரிகள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு புதிதாக பொலிஸ் சேவையில் இணைந்து கொண்ட பட்டதாரிகள் 22 பேர் உயர்தரப் பரீட்சையில் சகல பாடங்களிலும் அதிவிசேட சித்தி (ஏ) பெற்றுக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உபபொலிஸ் பதவிக்காக 26 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருந்ததாகவும் இதில் 201 பேர் மட்டும் தெரிவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இம்முறை தெரிவு செய்யப்பட்டவர்களில் பலர் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சேவையில் இணைத்து கொள்ளப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஒரு ஆண்டு காலம் பயிற்சி வழங்கப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

# புலிகளின் சர்வதேச வலையமைப்பின் முக்கியஸ்தர் மலேசியாவில் கைது

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பின் இரண்டாம் தலைவர் கைது செய்யப்பட்டுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பின் இரண்டாம் தலைவராகக் கருதப்படும் திருஞானசம்பந்தன் மணிவண்ணன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மணிவண்ணன், புலிகளின் சர்வதேச வலையமைப்பின் தலைவராக கருதப்படும் கஸ்ட்ரோவின் நெருங்கிய சகா எனத் தெரிவிக்கப்படுகிறது.

மலேசியாவில் வைத்து குறித்த நபர் [illegible] செய்யப்பட்டதாகவும் இலங்கைக்கு விரைவில் நாடு கடத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் கைது செய்யப்பட்டதனைத் தொடர்ந்து மணிவண்ணன் தலைமறைவாக வாழ்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# ஜகத் டயஸ் மீதான குற்றச்சாட்டு இராஜதந்திர விடயங்களை பாதிக்காது

## ஜேர்மனுக்கான இலங்கைத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான இராஜதந்திரியான மேஜர் ஜெனரல் ஜகத் டயசுக்கு எதிராக சுவிற்சர்லாந்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை அவரின் இராஜதந்திர விதிவிலக்குகளை பாதிக்காது என ஜேர்மனிக்கான இலங்கைத் தூதுவர் ரி.பி.மடுவேகெதர தெரிவித்துள்ளார்.

ஜேர்மனிக்கான இலங்கையின் பிரதித் தூதுவராக மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் கடமையாற்றுகின்றார். ஜேர்மனியிலுள்ள இலங்கைத் தூதரகமே சுவிற்சர்லாந்துடனான இலங்கையின் இராஜதந்திர விவகாரங்களையும் கையாளுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அச்சுறுத்தப்படும் மக்களுக்கான சமூகம் மற்றும் தண்டனைகளிலிருந்து விலக்களிப்பதற்கு எதிரான சுவிஸ் சங்கம் ஆகிய அமைப்புகள் சுவிற்சர்லாந்து சட்டமா அதிபரிடம் மேஜர் ஜெனரல் ஜகத் டயசுக்கு எதிராக போர்க்குற்றச்சாட்டு முறைப்பாடுகளை செய்துள்ளன.

இது குறித்து இலங்கைத் தூதுவர் மடுவேகெதர கூறுகையில்,

ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகளை பின்பற்றாமல் இந்த இராஜதந்திர விதிவிலக்குகளை தனிநபரோ அமைப்புக்களோ சவாலுக்குட்படுத்த முடியாது. அத்துடன் இத்தகைய முறைப்பாடுகளுக்கு நம்பத்தகுந்த ஆதாரங்கள் இருக்க வேண்டும். பொதுப்படையான குற்றச்சாட்டுக்களையே நாம் கேள்விப்பட்டுள்ளோம். வெறும் குற்றச்சாட்டு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## இலங்கையர்கள் மீதான தாக்குதல்

# உரியநடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசுக்கு பணிப்புரை

இலங்கையின் யாத்திரிகர்கள் சென்னையில் தாக்கப்பட்டமை குறித்து உரிய நடவடிக்கையை எடுக்குமாறு இந்திய மத்திய அரசாங்கம் தமிழக அரசாங்கத்தை கோரியுள்ளது.

இலங்கையில் இருந்து மகாபோதிக்கு சென்ற 85 பேரைக் கொண்ட சிங்கள யாத்திரிகர்கள் கடந்த 3 ஆம் திகதி சென்னையில் வைத்து தாக்கப்பட்டதுடன் அவர்கள் அணிந்திருந்த சிங்கம் பொறிக்கப்பட்ட இலங்கையின் சின்னம் அடங்கிய ரீசேட்களும் எரிக்கப்பட்டன.

இந்த நிலையில் குறித்த 85 யாத்திரிகர்கள் குழுவில் இருந்த மேலும் 3 பேர் தாக்கப்பட்டனர்.

இதனையடுத்து தாக்குதலை நடத்தியவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நாம் தமிழர் அமைப்பின் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் வெளிநாட்டவர்கள் மீது தமிழகத்தில் நடத்தப்பட்ட குறித்த தாக்குதல் குறித்து உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று இந்திய மத்திய அரசாங்கம் தமிழக அரசாங்கத்திடம் கோரியுள்ளது. (ஸ்ரீ-2)

# இந்திய யாத்திரையை கைவிட்டு நாடு திரும்பிய சிங்களவர்கள்

(கொழும்பு)

இந்தியாவில் தல யாத்திரையை மேற்கொண்டிருந்த சிங்களவர் மீது கடந்த 3 ஆம் திகதி சென்னையில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தையடுத்து அச்சம் காரணமாக இந்தியாவுக்கான தலயாத்திரையை மேற்கொண்டிருந்த சிங்களவர் பலரும் நாடு திரும்ப தொடங்கியுள்ளனர்.

இந்தியாவில் பௌத்த மக்களின் புனித பிரதேசமாக கருதப்படும் தம்மதீவப் பகுதிக்கு புனித யாத்திரை மேற்கொண்டிருந்த 85 சிங்கள யாத்திரிகர்கள் தமது பயணத்தை தொடராமல் நேற்று முன்தினம் அவசரமாக கட்டுநாயக்க விமான நிலையம் வந்து தமது இல்லங்களுக்கு திரும்பிச் சென்றுள்ளார்கள்.

அச்சம் காரணமாக தாம் யாத்திரை தொடராமல் அவசரமாக கொழும்பு திரும்பியதாக இவர்கள் தெரிவித்தார்கள்.

மேற்படி தாக்குதலில் 3 சிங்களவர்கள் காயமடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

(ஸ்ரீ-2)

# சனல்-4 இன் இறுதி வீடியோ குறித்து நல்லிணக்க ஆணைக்குழு விசாரணை

பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சியால் சில நாட்களுக்கு முன்னர் வெளியிடப்பட்டு இருக்கின்ற போர்க் குற்றச்சாட்டு ஆதார வீடியோவின் உண்மைத் தன்மை தொடர்பான விசாரணைகளை தேசிய நல்லிணிக்க ஆணைக்குழு ஆரம்பித்து உள்ளது.

ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் இவ்விசாரணையின் முடிவும் சேர்க்கப்படவுள்ளது. நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடக இணைப்பாளர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க இத்தகவலை வழங்கினார்.

ஆயினும் விசாரணையாளர்களின் பெயர்களை வெளிப்படுத்த மறுத்து விட்டார். பெயர்கள் வெளியில் வந்தால் விசாரணையாளர்கள் கடந்த காலங்களில் சிரமங்களை எதிர் கொண்டனர் என்றார்.

ஆணைக்குழு எதிர்வரும் நவம்பர் மாதம் இறுதி அறிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# ஜனாதிபதி தலைமையில் அமைச்சுக்களின் செயற்பாடுகள் குறித்து மீளாய்வு

(கொழும்பு)

அமைச்சுக்கள் சிலவற்றின் கடந்த கால செயற்பாடுகள் பற்றி ஆராயும் மீளாய்வுக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த 4 ஆம் திகதி அலரி மாளிகையில் நடைபெற்றது.

விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பு , சூழல், கமநல, வனவிலங்குகள், நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகிய அமைச்சுக்களின் செயற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டன.

அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, நிமல் சிறிபால டிசில்வா, ஆறுமுகன் தொண்டமான், எஸ்.எம்.சந்திரசேன, மஹிந்த யாப்பா அபேவர்த்தன, அநுர பிரியதர்சன யாப்பா, மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, நிதியமைச்சின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர ஆகியோர் உள்ளிட்ட முக்கிய அரச அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

(ஸ்ரீ-2)







யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடத்தும் அகில இலங்கை சைவ மாநாடு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஆரம்பமானது. இம்மாநாட்டின் முதல்நாள் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சென்னை பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறை முன்னாள் முழுநேர வருகைப் பேராசிரியர் முனைவர் நல்லூர் சா.சரவணன் மங்கள விளக்கேற்றுவதையும் துறைசை ஆதீன திருமுறைத் தோன்றல் தேவார இசைமணி பண்ணிசை செல்வர் இராசையா திருஞானசம்பந்தனின் பண்ணிசை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)

# சரிவைக்காட்டிய உலக பங்குச்சந்தைகள்

அமெரிக்க பங்குச் சந்தைகள் கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமையன்று கடும் வீழ்ச்சியைச் சந்தித்த நிலையில் ஆசிய மற்றும் ஐரோப்பிய பங்குச் சந்தைகளின் பங்கு விலைகளும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சரிந்துள்ளன.

அமெரிக்க பங்குச்சந்தைக் குறியீடான டவ்ஜோன்ஸ் கடந்த வெள்ளிக்கிழமை 4.3%சரிந்தது. இதையடுத்து ஆசிய பங்குச்சந்தைகளான ஹொங்கொங்கின் ஹெங்செங் (4.29%),ஜப்பானின் நிக்கி (3.72%) மற்றும் ஐரோப்பிய பங்குச்சந்தைகள் கடுமையாகச் சரிந்தன.




சர்வதேச சந்தைகளைத் தொடர்ந்து இந்திய பங்குச்சந்தைகள் கடந்த 4 நாட்களாக தொடர்ந்து சரிந்தன. இந்த 4 நாட்களில் சென்செக்ஸ் 1007 புள்ளிகள் சரிந்து அதாவது 17 ஆயிரத்து 306இல் நிலைபெற்றது. இதனால் முதலீட்டாளர்களுக்கு 4 இலட்சம் கோடி இந்திய ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஆனால் வெள்ளிக்கிழமை பிற்பகல் வெளியிடப்பட்ட அமெரிக்காவின் வேலையற்றோர் நிலை குறித்த விபரம் சந்தைகளில் எதிர்பார்த்த அளவுக்கு மோசமாக இல்லை என்பதால் ஐரோப்பிய பங்குச் சந்தைகள் சற்று உயர்ந்தன.

அதேநேரத்தில் கடந்த ஒரு வாரமாக உலகளாவிய பொருளாதார சந்தையில் காணப்படும் பெரும் தடுமாற்றங்களுக்கு எவ்விதமான நியாயமான அடிப்படையும் கிடையாது என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் மூத்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

**காரணங்கள்**

அதேநேரம் உலகில் காணப்படும் பொருளாதார மீட்சி கொஞ்சம் கொஞ்சமாக மங்கி மறைந்து கொண்டிருக்கிறது என்ற அச்சம் முதலீட்டாளர்களிடம் காணப்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகள் எதிர்கொள்ளும் கடன் பிரச்சினை மோசமடைவதாக தெரிகிறது.

ஸ்பெயினோ அல்லது இத்தாலியோ தாம் கொடுக்கவேண்டிய பணத்தை திரும்பச் செலுத்த முடியாமல் போகக்கூடிய வாய்ப்பு அதிகமாகிக் கொண்டிருக்கிறது.

இதன் காரணமாக இந்த இரு நாட்டிலும் உள்ள வங்கிகள் கடன் பெறுவதற்கு கஷ்டப்படுகின்றன. வளர்ச்சியைப் பெரிதாகப் பாதிக்கக்கூடிய அளவிற்கு ஐரோப்பா தழுவிய கடன் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற அச்சத்தை இது எழுப்பியுள்ளது.

**கவலைகள்**

இது ஒருபறம் இருக்க,கடந்த சில மாதங்களாக தேக்க நிலையில் இருப்பதாக தோன்றும் அமெரிக்க பொருளாதாரத்தின் நிலை குறித்து தற்போது பாரதூரமான கவலைகள் எழுந்துள்ளன.

அங்கே குறைவான வளர்ச்சியும் அதிகமான வேலையில்லாப் பிரச்சினையும் காணப்படுகின்றது.

இந்தப் பிரச்சினைகளுக்கு முடிவைக் காணக்கூடிய ஒரு தீர்க்கமான தலைமை இல்லை என்றும், ஐரோப்பாவில் காணக்கூடிய பிரச்சினைகளை முடிபுக்கு கொண்டு வரும் முழுமையான திட்டத்தை கொண்டு வர அப்பிராந்திய தலைவர்கள் தவறிவிட்டனர் என்றும் சந்தையில் கருத்துக்கள் நிலவுகின்றன.

இதன் காரணமாக மிகப் பெரிய அளவிலான நிச்சயமற்ற நிலை காணப்படுகின்றது.



இதுவரை பாதுகாப்பான முதலீடுகளாக பார்க்கப்பட்ட விடயங்கள் கூட தற்போது ஆபத்தானதாக பார்க்கப்படுகின்றன.

முதலீட்டாளர்களும் சந்தையிலிருந்து வெளியேறவே நினைக்கின்றனர்.

# ஆட்டம் காணும் அமெரிக்க பொருளாதாரம்

அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி சென்ற ஜுன் மாத்துடன் முடிபடைந்த 2-வது காலாண்டில், எதிர்பார்த்த அளவை விட, 0.5 சதவீதம் குறைந்து, 1.3 சதவீதம் என்ற அளவிற்க உள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. மேலும் முதல் காலாண்டின் பொருளாதார வளர்ச்சி 1.9 சதவீதத்தில் இருந்து 0.4 சதவீதமாக மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்




களிலும் அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி, மந்த கதியில் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் நான்காம் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி மதிப்பீடு 3.1 சதவீதத்தில் இருந்து 2.3 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. கச்சா எண்ணெய் விலை உயர்வு, சுனாமி பாதிப்பால் ஜப்பான் நாட்டின் வாகனம் மற்றும் உதிரிப்பாகங்கள் விநியோகம் குறைந்துபோனது, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பு உள்ளிட்டவற்றால் அமெரிக்க பொருளாதாரம் மந்தம் கண்டுள்ளது.

இதன் எதிரொலியாக அமெரிக்கர்கள் செலவழிப்பதும் குறைந்துள்ளதாக ஆய்வொன்றில் தெரிய வந்துள்ளது. 2008-ம்ஆண்டு பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு, இந்த அளவிற்கு தற்போதுதான் நுகர்வோர் செலவழிப்பு குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி, இவ்வாண்டு இறுதி வரை மந்தமாகவே இருக்கும் என்று பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.




# 2016-ல் 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகள்

# இலக்கை அடையுமா இலங்கை?

இலங்கையின் சுற்றுலாத்துறை வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது. பல்வேறு நாடுகளில் இருந்து இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கிறது. இவ்வருடம் ஜனவரி முதல் யூன் மாதம்வரை 3 இலட்சத்து 81 ஆயிரத்து 538 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர்.

இந்தியாவில் இருந்துதான் அதிக சுற்றுலாப் பயணிகள் (85ஆயிரத்து 757 பேர்) வருகை தந்துள்ளனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் வாகனங்கள் செலுத்த வேண்டிய கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி கார்கள்,வான்கள், ஜீப்கள் 400 ரூபாயும், கனரக வாகனங்கள் 2000ரூபாய் வரையும் செலுத்த வேண்டும்.

இவ்வீதியில் மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்துக்கு அதிகமாக பயணிக்கக்கூடிய வாகனங்களே இவ்வீதியைப் பயன்படுத்த அனுமதிக்கப்படும்.

இவ்வாறான வீதி யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு ஏ-32 வீதியின் நீட்சியாக மன்னார்-புத்தளம் ஊடாக கொழும்புக்கு அமைக்கப்படுமாயின் வாகனங்கள் 3 மணி நேரத்தில் கொழும்பை சென்றடையமுடியும்.



இதன் மூலம் எமது நாட்டுக்கு 585 மில்லியன் டொலர்கள் வருமானமாக கிடைத்துள்ளது என சுற்றுலாச் சபையின் பணிப்பாளர் ரூமி ஜவ்பர் தெரிவித்துள்ளார்.

2016-ம் ஆண்டில் 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் என்ற இலக்கை எம்மால் அடைய முடியும். இதற்காக நாட்டின் ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கையை 45 ஆயிரமாக உயர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் அவர் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த வருடத்தில் ஏழு இலட்சத்து 50 ஆயிரம் சுற்றுலாப் பயணிகளை வரவழைப்பதே எமது நோக்கமாகும்.

எது எவ்வாறாயினும், பல்வேறு நாடுகளில் 15 வீதத்தால் சுற்றுலாப் பயணிகளின் வருகை வீழ்ச்சியடைந்துள்ள நிலையிலும், இலங்கையில் பயணிகளின் வருகை அதிகரித்துச் செல்கிறது என்பதே முக்கியமான விடயமாகும். கடந்த ஆண்டு 6 இலட்சத்து 20 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர். இதன் மூலம் 410 மில்லியன் டொலர்கள் வருமானம் அடைந்தோம்.

2016ஆம் ஆண்டில் 25இலட்சம் சுற்றுலாப்பயணிகள் என்ற இலக்கை அடைந்தால் 2.75 பில்லியன் டொலர்கள் வருமானத்தை நாம் பெறலாம். அத்துடன் இத்துறையில் தங்கிவாழ்வோரின் எண்ணிக்கை 15 இலட்சங்களாக உயரக்கூடும்.

| மாதம் | பயணிகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | 74,197 |
| பெப்ரவரி | 65,797 |
| மார்ச் | 75,130 |
| ஏப்ரல் | 63,835 |
| மே | 48,943 |
| ஜுன் | 53,636 |
| மொத்தம் | 3,81,538 |

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 108.92 | 110.52 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 176.51 | 180.53 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 152.75 | 156.87 |
| சுவிஸ் பிராங் | 141.09 | 145.79 |
| கனேடிய டொலர் | 110.51 | 113.82 |
| அவுஸ்திரேலிய டொலர் | 113.21 | 116.89 |
| சிங்கப்பூர் டொலர் | 88.66 | 91.19 |
| ஜப்பான் யென் | 1.37 | 1.41 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.46 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 29.85 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# ஊழியர்களை குறைக்க எஸ்.எஸ்.பி.சி. திட்டம்

(லண்டன்)

சர்வதேச அளவில் முன்னணி வங்கிகளில் ஒன்றான எச்.எஸ்.பி.சி வங்கி செலவினங்களைக் குறைக்கும் திட்டத்தின் கீழ் சர்வதேச அளவில் தனது தமது 30 ஆயிரம் பணியாளர்களை நீக்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

எச்.எஸ்.பி.சியில் தற்போது 3 இலட்சம் ஊழியர்கள் பணிபுரிகின்றனர். இதில் வரும் இரண்டு ஆண்டுகளுக்கு அந்த வங்கியின் 3.5 பில்லியன் டொலர் செலவினங்களைக் குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

HSBC

இதனடிப்டையில் இலத்தீன் அமெரிக்கா,அமெரிக்கா,பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் பணிபரியும் எச்.எஸ்.பி.சி. வங்கி ஊழியர்களில் 5 ஆயிரம் பேரைக் குறைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

தொடர்ந்து மேலும் 25 ஆயிரம் ஊழியர்கள்ள 2 ஆண்டுகளுக்குள் குறைக்க அந்த வங்கி தீர்மானித்துள்ளது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6845.38 | 6751.29 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6210.07 | 6152.23 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் புரள்வு (ரூபா.மில்.) 8,612.10

***உயர்வடைந்தபங்குகள்(ரூ.):*** ஈஸ்ரேன் மேர்ஷன்ட்(3025.90), ஈஸ்ட் வெஸ்ட் (23.60), ஹரிசந்திர(2900.00), இன்டஸ்ரியல் அஸ்ப்.(554.30), ஏஎம்எப் கோ லிமிட்.(585.40).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** சிலோன் லெதர்(W) (1.80), சிங்கலங்கா (1559.60), ஹார்டியன் கப்பிரல்(173.90), ஹொரண(58.30), லேக் ஹவுஸ் பிறின்ட்.(125.30).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### பிரிவின் நிலை

மலர்ந்த மலர்கள் எல்லாம்
மடிவதென்று மலருக்கு தெரியாது
பழகிய உறவுகள் எல்லாம்
பிரியும் என்று பழகும்
உறவுக்கு தெரியாது

சி.இந்திரவதனி
வயாவிளான்

### ஏன் இதயம் உடைத்தாய்...?

தந்தையின் சொல்கேட்டு இத்
தரணியிலே வாழ்ந்துவந்தேன்
காலனவன் கவர்ந்து சென்றான்
என் தந்தையை
சொல்லி அடங்காது என் துயரம்
நிலைதடுமாறி நின்று
காதல் எனும் போதையில் விழுந்தேன்
கனவுகளைக் கலைத்துவிட்டு
கற்பனையில் நான் மிதந்தேன்
நியமென்றும் நினைத்திருந்தேன்
என் காதல் கானல் நீராய் போயிற்று
படைத்தவன் எவனோ
அவன் பதில் நாடி
என் வாழ்க்கைப் பயணம்

என்.ஜலா
கரவெட்டி

### வெளியே வா

காதல் மொழி பேசாத
கன்னியர் தான் யாரோ
கொண்ட காதலினால்
-துன்பம் கொள்ளாத
ஆடவர்தான் யாரோ
எல்லாம் அறிந்த
வல்லவனைக்கூட
வாட்டி வதைப்பது
சொல்லாமல் வந்த காதல்
நன்றாக நான் அறிவேன்
என்றாலும் சொல்கின்றேன்
உன்னை உயர்வாக்க
உத்தமமான
பல வழிகளுண்டு
அத்தனையும் விட்டிட்டு
அநாவசியமாக
காதல் தான் வாழ்வென்று
காலத்தைக் கரைக்காதே
பொன்னான நேரத்தை
வீணாக்க எண்ணாமல்
சிந்தித்து வாழ்வை
சிறப்பாக்க எண்ணு
அதுவே என்றும்
உயர்வாக்கும் உன்னை

கே.எஸ். ரமணி

### அவரவர் பார்வையில்

**ஏக்கம்**

ஓடி ஓடி உழைத்தாலும்
உட்கார்ந்து உண்பவர்
இருந்தால் ஏழை எப்போதும்
-ஏழைதான்

**நல்வழி**

உழைத்து வாழ்
உன் உழைப்புக்கு
இறைவன் என்றாவது
கூலி கொடுப்பான்

கே.பி.பி.நாகா
ஏ.வி றோட் அரியாலை

**இதயம்**

வாழ்வின் ஓட்டத்தை
கணிக்கும் கடிகாரம்!

**துன்பம்**

கவலையின் உறைவிடம்
கலைவது கடினம்

**நட்பு**

ஆணித்தரமான அன்பு
அசைந்துவிட்டால் வம்பு

ஆர்.ஜெயா
அராலி

### வரம்

சேயை சீராட்டும் தாயென
எனைத் தாங்கும்
என்னுயிரின் உறவே!
உன் மடியில்
தலைசாயும் நேரம்
என் உயிர்
பிரிய நேர்ந்ததால்...
அந்த கணம் என் வாழ்வில்
இனிய வரம் கிட்டுமா?

அருள்திகா

### சிறகொடிந்த

பொல்லாத உலகம் என்று
புரிந்து தான் போனாயோ
செல்லாத இடத்திற்கேன்
செல்வமகன் நீ போனாய்
நீயில்லா வாழ்வு எமக்கு
நெருப்பாய் எரியுதடா
போர் வந்து எம்மைப்
பொடியாக்கி விட்டதடா
சின்ன மருக் கொழுந்தே
சிறகொடிந்து போனோமே
வண்ணமாய் நீ வடிக்கும்
வரிகளைக் காண்பதெப்போ



கொடியூர்
ரஞ்சிதம்

### இமயம் தொட...

பாம்புகளுடன் பழகு-ஆனால்
அது தீண்டுமென்பதை
மறந்து விடாதே
உன் பயணத்தின்போது
நாகங்களையும் நாக்கிளிகளையும்
பிரித்தறிந்துகொள்
நாகங்கள் அமைதிகொள்ள
நாக்கிளிகள் படமெடுத்தாடும்
பிரித்தறி பாலும் கள்ளும் வெண்மையே

மாவை நா.கஜேந்திரன்

### உன்னால்

என் விழிகளுக்கு -வழிகள்
தெரியவில்லை?
உதடுகள் இரண்டும்
ஒன்று சேர மறுத்துவிட்டனவே
வார்த்தைகள் எல்லாம்
வாய்கட்டி சிரிப்பெல்லாம்
சிதறிவிட்டது
ஒவ்வொரு மழைத்துளி வீதம்
தலையணைக்கும் தலைக்கும்
விவாகரத்தானது
உன்னைக் கண்ட பின்பு!
என் உயிரும் உடலுக்குடன்
சேதமாகின்றது
ஆனாலும் உனக்கு
சொந்தம் என்பதால்
மீண்டும் மீண்டும்
உயிர்த்துக் கொள்கிறதே

எஸ்.ஜிந்துஜா
கோண்டாவில்

## மௌனத்தின் தேடல் – 82



### மருண்டு போகாதீர்

இரண்டு கரங்கள் இயங்குவதை
திரண்ட நான்குகால் உரத்து
திறமாய் இயக்குவதில் திகைப்பில்லை
உருண்ட புவியினில் இவைகண்டு
மருண்டுபோகாதீர் மானிடரே!

குளப்பிட்டி க.அருமைநாயகம்

### இடம்

கணனி தளங்களில்
கண்ணீருக்கும் இடமுண்டு
கனவுகளுக்கும் இடமுண்டு
விலங்குகளுக்கும் இடமுண்டு-அது
விளையாட்டு தளமாக

க.தங்கலீலா
கரவெட்டி

### கலையுகம்

வாலாட்டி நன்றி சொல்லும்
வாயில்லா ஜீவனே!
வாலாட்டும் நன்றி கெட்ட
வாய்பேசும் ஜீவனுக்கு
வலைப்பின்னலுடனே நன்றியுகட்டும்
கலை சொல்லும் கலையுகமே!!

பொ.புனிதன்
வரியப்புலம்

### புற நடை

அற்ப பிராணியே!
ஏற்ற மனிதர்கள்-வாழ்வில்
தோற்றுப் போக
கற்றுக் கொள்கிறாயா
நெற் எனும் இணையத்தை

பி.சுகாசினி
வட அல்வை

### துடிப்பு

அவலக்குரலோடு
அழுது மடிகிறதே
மானிடம்
அதிகார வர்க்கத்தின்
அநியாயம் பார்த்து
அழுதிடத்துடிக்கிறதே
ஐந்தறிவு ஜீவன்

பெ.சத்துருக்கன்
யாழ்ப்பாணம்

### பகுத்தறிவு

பகுத்தறிவு கொண்ட
மனிதன்
பகுத்தறிவு கற்று
வாழாமல் மிருகமானான்
ஐந்தறிவு கொண்ட ஜீவனோ
பகுத்தறிவோடு

தமிழினி
சுன்னாகம்

### தேடல்

காணாமல் போன
எஜமானை தேடி
கணனி பாவிக்கும்
நிஜமான நாயோ?

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### சனல் நாலு

கொம்பியூட்டர் காலத்திலே
ஈழத்தில் நடந்த
கொடூரத்தை
நாய் கூடப் பார்க்குதப்பா!

ஏ.அன்பு
வடவரணி

### விடியல்

உன்னைக் கூட விட
வில்லையா? கல்வி மோகம்
இருந்தும் இப்பூமி
வாழ் மக்களில்
இன்னும்-அடிப்படை
கல்வியறிவற்றுக் - கூட
வாழ்கிறார்களே...

R.ராஜி

### வேகம்

காலத்தின் வேகம்
எமக்கு மட்டுமல்ல
இந்த வாயில்லா
ஜீவனுக்கும் தெரிகிறது

த.பிருந்தா
பருத்தித்துறை

### நினைவுகள்

வன்னிப் போர் தந்த காயங்கள்
ஆண்டுகள் சென்றாலும்
ஆறவில்லை
வாய்பேசாத இந்த நாய்கூட
இணையத்தின் மூலம்
பழகித்திரிந்த தன் தோழர்களின்
இழப்பை நினைத்து
பரிதவிப்புடன் ஏங்கியவாறு

அ.துசாந்தினி
கொம்மாந்தறை

### வென்றிடு

நண்பர்களே!
நாளைய தலைவர்கள்
நாங்களே...
எனும் நிலை வருமுன்
கற்றிடு ஆங்கிலத்தை
பெற்றிடு தொழில் நுட்பத்தை
வென்றிடு இவ்வுலகை

ந.வினோரூபன்
யா/நெல்லியடி ம.ம.வி

### மோகம்

ஏய் ஐந்தறிவு
ஜீவனே
உன்னையுமா
விடவில்லை
அறிவியல் சாதன
மோகம்?

ஜெயரூபன்
பருத்தித்துறை

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் – 83

**அன்பு வாசகர்களே !**



உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 12.08.2011 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -



# காஞ்சனா

திரை விமர்சனம்

டான்ஸ் மாஸ்டர் ராகவா லோரன்ஸின் நடிப்பு, தயாரிப்பு இயக்கத்தில் முனி படத்தின் பகுதி -2 ஆக வெளிவந்திருக்கும் திகில் படம் தான் காஞ்சனா.

பேய் என்றாலே அருகில் இருப்பவர் அண்ணியா, அம்மாவா என்று கூட பார்க்காமல் அவர்களது இடுப்பில் ஏறி அமர்ந்து கொண்டு அலறும் அளவு பயந்தாங்கொள்ளி ஹீரோ ராகவாலோரன்ஸ். அவரது உடம்புக்குள்ளேயே ஆவி புகுந்ததென்றால் என்னாகும்....? ஏதாகும்....? என்பதுதான் காஞ்சனா படத்தின் மொத்த கதையும்! ஆனால் லோரன்ஸின் உடம்பில் புகுந்தது காஞ்சனா எனும் திருநங்கையின் ஆவி. அது ஒரு நல்ல ஆவி. அதுவும் நல்ல காரியம் ஒன்றிற்காக பாடுபடும் ஆவி என்பதுடன் தீயவர்களை தீர்த்து கட்டும் ஆவி என்பதுதான் காஞ்சனா படத்தின் பலம். இது மாதிரி ஒரு கலக்கல் பேய் கதையுடன் லட்சுமிராய்-லோரன்ஸின் காதல் கதையையும் கலந்து கட்டி கோவை சரளா, தேவதர்ஷினி, ஸ்ரீமன் உள்ளிட்டவர்களுடன் காமெடியாக காஞ்சனாவை காட்சிப்படுத்தி இருப்பதற்காகவே இயக்குநர் ராகவா லோரன்ஸை ஆஹா - ஓஹோ எனப் பாராட்டலாம்.





கிரிக்கெட்டில் சிக்ஸராக விளாசும் அளவு சூரர், லட்சுமிராய் உடனான காதலில் வீரர் என்று மற்ற விடயங்களில் எல்லாம் வீராதி வீரராக சூராதி சூரராக திகழும் ராகவாலோரன்ஸ், பேய் கதை சொல்லும் குழந்தைகளைப் பார்த்து மிரள்வதும், பாத்ரூம் போக கூட அம்மாவை துணைக்கு அழைத்துபோகும் அளவு பயந்த சுபாவம் கொண்டவராக உலா வருவதுமாக இருவேறு துருவங்களிலும் உச்சத்தை தொடும் அளவு நடித்து ரசிகர்களை பேஷ், பேஷ் சொல்ல வைத்துவிடுகிறார்.

காமெடி, ஆக்சன், த்ரில், திகில் எல்லாவற்றிலும் கலக்கி இருக்கும் லோரன்ஸ், லட்சுமிராயுடனான ஆட்டம், பாட்டம், கொண்டாட்டத்திலும் ஆடி அசத்தியுள்ளார்.

லோரன்ஸின் ஜோடியான லட்சுமிராய் பிரமாத கவர்ச்சி விருந்து வழங்குகின்றார்.

வெற்றி கிருஷ்ணசாமியின் மிரட்டலான ஒளிப்பதிவும் தமனின் பயமுறுத்தும் பின்னணி இசையும் காஞ்சனாவிற்கு மேலும் மகுடம் சேர்க்கின்றன. ஒருபக்கம் ஆவி-பேய்-பிசாசு என பயமுறுத்தினாலும் மற்றொருபக்கம் காமெடி, கவர்ச்சி நெடி என ஜனரஞ்சகமாக படம் தந்திருக்கும் ராகவாலோரன்ஸ், நடிப்பு, தயாரிப்பு இயக்கம் என எல்லாவற்றிலும் வெற்றி பெற்றுவிடுகிறார்.

***மொத்தத்தில் காஞ்சனா- கலக்கலண்ணா!***

# கோபத்தை கைவிட்டார் விஜய் கையிலெடுக்கிறார் சீமான்!!



இயக்குநர் சீமானின் இயக்கத்தில் விஜய் நடிக்கவிருப்பதாக கூறப்பட்ட கோபம் படத்தை கிட்டத்தட்ட கைவிட்டுவிட்டார் விஜய். ஆனால்சீமான் அதே கோபத்தை வேறு நடிகரை வைத்து இயக்கவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சீமான் இயக்கத்தில் விஜய் நடிக்கப் போகும் படத்திற்கு கோபம், பகலவன் என பலபல பெயர்கள் கூறப்பட்டன. எந்த பெயரும் உறுதி செய்யப்படாத நிலையில் சீமான் சிறைவாசத்துக்குள்ளானார். சிறைக்குள் இருந்த படியே கோபம் படத்தின் கதையை எழுதி முடித்த சீமான் சிறையில் இருந்து வெளியே வந்ததும் தேர்தல் பிரசாரத்தில் பிஸியானார். இடையில் கிடைத்த நேரத்தில் எல்லாம் விஜய்க்கு கதை சொன்ன சீமான் கதை சொல்லிச் சொல்லியே ஓய்ந்து விட்டாராம்.

இரண்டு மூன்று க்ளைமாக்ஸ்களை சொல்லியும் அதில் விஜய்க்கு திருப்தி இல்லாத நிலையில் அடுத்தடுத்த பட வேலைகளில் ஆர்வம் காட்டத்தொடங்கிவிட்டார்இளைய தளபதி .2013 வரை சில படங்களுக்கு விஜய் தனது கால்ஷீட்டை வாரி வழங்கியிருக்கிறார். அதில் கோபத்துக்கு இடமில்லை என்பதால் கிட்டத்தட்ட கோபத்தை விஜய் கைவிட்டு விட்டதாகவே கூறுகிறார்கள்.

அதேநேரம் சீமான் அந்த கோபத்தை கைவிடாமல் கையிலெடுக்கப் போவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. வேறு நாயகனை வைத்தோ அல்லது அவரே ஹீரோவாகவோ கோபத்தை வளர்க்கக் கூடும் என்று அந்த தகவல் கூறுகிறது.





# வெற்றிமாறன் வேட்டையில் சிம்பு

தேசிய விருது இயக்குநரான வெற்றிமாறன் இயக்கும் அடுத்த படத்தில் நடிகர் சிம்பு ஹீரோவாக நடிக்கவுள்ளார். வெற்றிமாறனுக்கு தேசிய விருது கிடைத்தபோதே உங்கள் அடுத்த பட ஹீரோவும் தனுஷ்தானா என்ற கேள்வியும் எழுந்தது. ஆனால் அதை இன்னும் முடிவு பண்ணவில்லை என்று கூறிய வெற்றிமாறன் இன்னொரு புறம் வேறு ஒரு ஹீரோவை தேடிக்கொண்டிருந்தார். இப்போது இந்த வெற்றியின் வேட்டையில் சிக்கியிருப்பவர் நடிகர் சிம்பு.

இதற்கு முதல் பொல்லாதவன் பட சூட்டிங் நடந்த போதே



சிம்புவை சந்தித்து கதை சொல்லியிருந்தார் வெற்றி.

அதன் பின்னர் தனுஷின் சிலபல தீவிர முயற்சியால் அந்த முடிவு தற்காலிகமாக தள்ளி வைக்கப்பட்டது. இதையடுத்து மீண்டும் தனுஷ்- வெற்றிமாறன் கூட்டணி உருவாகி அந்த படம் தேசிய விருதையும் பெற்றது. இந்நிலையில் தனுஷ், வெற்றிமாறனிடம் நாம் சேர்ந்து மறுபடியும் ஒரு படம் கொடுக்கலாமா?என்று கேட்டதாக கிசுகிசுக் கள் கிளம்பின. ஆனால் வெற்றியோ இடையில் வேறொரு ஹீரோவுடன் ஒரு படம் பண்ணிட்டு வருகின்றேன் என்று கூறிவிட்டாராம். அவர் சொன்ன அந்த வேறொரு ஹீரோ நம்ம சிம்புதான். ஒஸ்தி முடிந்ததும் இந்த படத்திற்கு பூசை போடப்படும் என தெரிகின்றது. பொல்லாதவன் மாதிரி இதுவும் வடசென்னை கதைதான் என்பது கூடுதல் தகவல்.

# அனுஷ்காவுக்காக தவம் கிடக்கும் செல்வராகவன்

இரண்டாம் உலகம் படத்தை தொடர்ந்து செல்வராகவன் அடுத்து இயக்கப் போகும் புதிய படத்தில் அனுஷ்காவை நடிக்க வைக்க தீவிர முயற்சி செய்து வருவதுடன் அவரின் கால்ஷீட்டுக்காக தவம் கிடந்தும் வருகிறார். நடிகை சோனியா அகர்வாலை விவாகரத்து செய்த பின்னர் சமீபத்தில் கீதாஞ்சலியை இரண்டாவது திருமணம் செய்திருக்கும் செல்வராகவன் தனது தம்பி தனுஷைவைத்து இரண்டாவது உலகம் என்ற படத்தை இயக்கி வருகின்றார். இப்படமும் கிட்டதட்ட முடியும் தறுவாயில் உள்ளது. இதற்கடுத்த ஒரு படத்தை இயக்கப் போகிறார் செல்வராகவன். கதாநாயகிக்கு முக்கியத்துவம் தரும் படமாக இந்தப் படம் அமையப் போகிறதாம். இதற்காக அனுஷ்காவை குறிவைத்திருக்கிறார்.



அருந்ததீ படத்தில் அனுஷ்காவின் நடிப்பை பார்த்ததில் இருந்தே அவரை எப்படியாவது தன்னுடைய படத்தில் நடிக்க வைக்க வேண்டும் என்று நீண்டநாட்களாக எண்ணிக் கொண்டு இருந்தாராம். ஆனால் இருவரும் அவரவர் படங்களில் பிஸியாக இருந்ததால் அதற்கான சரியான வாய்ப்புக்கள் ஏதும் அமையவில்லை. இந்நிலையில் கதாநாயகியை மையமாக கொண்டுள்ள இந்த கதையை அனுஷ்காவிடம் கூறினாராம் செல்வா. அனுஷ்க்காவுக்கோ கதை ரொம்ப பிடித்து போக நடிக்க சம்மதம் தெரிவித்து விட்டதாக கூறப்படுகிறது. ஆனால் கால்ஷீட்டை மட்டும் அனுஷ்கா இன்னும் கொடுக்கவில்லையாம். இதனால் அனுஷ்காவின் கால்ஷீட்டுக்காக தவம் கிடந்து வருகிறார் செல்வராகவன்.

# ஏழாம் அறிவு படத்தில் வித்தியாசமான வேடத்தில் சூர்யா



ஏ. ஆர். முருகதாசின் இயக்கத்தில் சூர்யா - ஸ்ருதி ஹாசன் நடிக்கும் படம் ஏழாம் அறிவு. இந்தப் படத்தின் இறுதிக் கட்டப் படப்பிடிப்பு நடந்து வருகின்றது. ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைத்துள்ள இந்தப் படத்தின் பாடல்கள் இன்னும் வெளியாகவில்லை. இந்நிலையில் இணையத்தில் இந்தப் பாடல்களில் இரண்டு மட்டும் சட்ட விரோதமாக வெளியாகி விட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இது குறித்து படத்தின் தயாரிப்பாளர் உதயநிதிஸ்டாலின் கூறுகையில், இன்னும் இசைக் கோர்ப்பு பணியை ஹாரிஸ் ஜெய ராஜ் முடிக்கவில்லை. எனவே இப்போது வெளியாகி இருப்பது என்ன பாட்டு என்று எனக்குத் தெரியாது என்றார். ஆனால் "இன்னும் இறுதி இசை சேர்க்காத பாட்டு" என்ற பெயரில் பல்வேறு தளங்கள் மற்றும் வலைப்பூக்களில் இந்தப்பாடல்கள் உலா வருகின்றன.



வட்டக்கட்சி தூயமணி முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்பள்ளி சிறார்களின் இசையும் அசைவும் மற்றும் விநோதவுடை காட்சிகளையும் விருந்தினராக கலந்து கொண்ட கரைச்சி பிரதேச ஆணையாளர் எஸ்.சிவசோதி முன்பள்ளி சிறாருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.(படங்கள்:-வட்டக்கச்சி செய்தியாளர்.)

# வடக்கு-கிழக்கு வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை

வடக்கு- கிழக்கு மாகாணங்களின் வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தம் நிறைவடைந்ததனைத் தொடர்ந்து வடக்கில் மட்டும் 50 வைத்தியசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்ட வைத்தியசாலைகள் இவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

அமெரிக்கா, ஜப்பான், கொரியா போன்ற நாடுகளைச் சேர்ந்த பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் வைத்தியசாலை அபிவிருத்திக்காக உதவிகளை வழங்கி வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். (ஸ்ரீ-2-4)

# சில பரீட்சார்த்திகள் 2 அனுமதி அட்டைகளை பெற்றுள்ளனர்

## பரீட்சைத்திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள சில பரீட்சார்த்திகள் இரண்டு விண்ணப்பங்களை சமர்ப்பித்து இரண்டு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்டமை தெரிய வந்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த சட்டவிரோத செயல் குறித்து பரீட்சை நிலைய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இரண்டு அனுமதி அட்டைகளை வைத்திருப்போர் அடையாளம் காணப்பட்டால் அவர்களுக்கு இரண்டு வருடங்களுக்கு பரீட்சை எழுத தடை விதிக்கப்படுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் இரண்டு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்டுள்ள பரீட்சார்த்திகள் அதில் ஒன்றை பரீட்சை திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

# மிலாங்கொட ராஜா மரணம்

ஆசியாவில் பெரிய தந்தத்தை கொண்டுள்ளதாக நம்பப்படும் மிலாங்கொட ராஜா என்னும் யானை அதனது 70 ஆவது வயதில் இலங்கையில் உயிரிழந்துள்ளது. கண்டி தலதாமாளிகையில் வருடாந்த பெரஹர ஊர்வலத்தில் புத்தரின் தந்தத்தை (பல்) சுமந்து வரும் பணியை இந்தயானை கடந்த பல தசாப்தங்களாக செய்து வந்திருக்கிறது.

ஆசிய யானைகள்ள பொறுத்தவரை அவை ஆபிரிக்கா யானைகளை விட அளவில் சிறியவை. ஆசிய யானைகளின் தந்தங்களும் ஆபிரிக்க யானைகளின் அளவிற்கு நீளமாக வளர்வதில்லை.

ஆனால் இந்த மிலாங்கொட ராஜாவுக்கு தந்தம் நிலத்தை தொடும் அளவிற்கு நீளமானதாகும். ஆசியாவிலேயே மிக நீண்ட தந்தம் கொண்ட யானை இதுதான் என்று நம்பப்படுகின்றது.

1945 ஆம் ஆண்டு புத்தளம் மாவட்டம் ஆணமடுவ பகுதியில் வைத்து அப்புகாமி மிலாங்கொட என்பவரும் அவரது கூட்டாளிகளும் ஒரு கூட்டம் யானைகளை பிடித்திருக்கிறார்கள். அதில் இந்த யானையும் அடங்கும்.

கேகாலையை சேர்ந்த அப்புகாமி மிலாங்கொடவுக்கு தற்போது வயது 89. அவரிடம் இந்த மிலாங்கொட ராஜாவைப் பற்றிக் கேட்டபோது, தான் அதனை பிடித்தபோது அது மிகவும் சிறிய யானையாக இருந்ததாக கூறினார்.

வழமையான யானை குட்டிகளை விட அது சிறிதாக இருந்ததாம். அத்தோடு சில வாரங்களிலேயே அது நன்றாக பழகிவிட்டதாம். தான் அதனைப் பிடித்து வளர்க்க தொடங்கிய பின்னர் தான் அதற்கு தந்தமே வளர தொடங்கியதாகவும் அவர் கூறியுள்ளார்.

கண்டிப் பெரகராவில் புத்தரின் புனித தந்தத்தை சுமந்து வருவதற்கான பணியை கடந்த 40 வருடமாக இந்த மிலாங்கொட ராஜா செய்து வந்திருக்கின்றது.

கடந்த ஒன்றரை வருடமாக சுகவீனமுற்றிருந்த இந்த யானை இறந்த பின்னர் பௌத்த பிக்குமாரால் அதற்கான இறுதிச் சடங்குகள் செய்யப்பட்டது. (எ-8)




★ 1461-மிங் வம்ச சீன தளபதி காவோசின் செங்டொங் பேரரசருக்கு எதிராக இராணுவப் புரட்சியை நடத்தி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து தற்கொலை செய்து கொண்டான்.

★ 1819-கொலம்பியாவின் பொயாக்கா என்ற இடத்தில் ஸ்பானியர்களுக்கு எதிரான போரில் சிமோன் பொலிவார் பெரு வெற்றி பெற்றான்.

★ 1832-இலங்கையில் சேமிப்பு வங்கி ஆரம்பிக்கப்பட்டது.

★ 1898-யாழ்ப்பாணம் மானிப்பாயில் டாக்டர் ஸ்கொட் தலைமையில் மானிப்பாய் மருத்துவமனை புதிய கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1906-கொல்கத்தாவில் வங்காளப் பிரிவினை எதிர்ப்புப் போராட்டத்தின் போது முதல் இந்திய தேசியக் கொடி உருவாக்கப்பட்டு பார்சி பகான் சதுக்கத்தில் ஏற்றப்பட்டது.

★ 1927-ஒன்டாரியோவுக்கும் நியூயோர்க்கிற்கும் இடையில் அமைதிப் பாலம் அமைக்கப்பட்டது.

★ 1933- ஈராக்கில் சுமைல் கிராமத்தில் 3 ஆயிரம் பேர் ஈராக்கிய அரசால் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: குவாடல்கனால் போர் ஆரம்பம். அமெரிக்க கடற்படையினர் சொலமன் தீவுகளின் குவாடல்கனால் தீவில் தரையிறங்கினர்.

★ 1944-திட்டப்படுத்தப்பட்ட முதலாவது கணிப்பானை (ஹர்வார்ட் மார்க் 1) ஐபிஎம் நிறுவனம் வெளியிட்டது.

★ 1945-இரண்டாம் உலகப் போர் ஹிரோஷிமா மீது அணு குண்டு வீசப்பட்டதை அமெரிக்க ஜனாதிபதி ஹரி ட்ருமன் அறிவித்தார்.

★ 1955-சொனி நிறுவனம் தனது முதலாவது திரிதடைய வானொலியை ஜப்பானில் விற்க ஆரம்பித்தது.

★ 1960- கோட் டி ஐவரி பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1976-வைக்கிங் 2 விண்கலம் செவ்வாயின் சுற்று வட்டத்துள் சென்றது.

★ 1998-தான்சானியாவிலும் கென்யாவிலும் அமெரிக்க தூதரகங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகளில் 224 பேர் கொல்லப்பட்டு 4 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

★ 2006-இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியின் உறுப்பினர் சிவப்பிரகாசம் மரியதாஸ் என்பவர் திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்டார்.

### பிறப்புக்கள்

★ 1925-எம்.எஸ். சுவாமிநாதன், இந்திய அறிவியலாளர்

★ 1933-வைஜயந்திமாலா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை

★ 1948-கிறெக் சப்பல், அவுஸ்திரேலியத் துடுப்பாளர்

★ 1966-ஜிம்மி வேல்ஸ், விக்கிப்பீடியாவை ஆரம்பித்தவர்

### இறப்பு

★ 1941-இரவீந்திரநாத் தாகூர், மகாகவி, நோபல் பரிசு பெற்றவர் (பி.1861)

### சிறப்பு நாள்

★ கோட் டி ஜ்வரி- சுதந்திரதினம் (1960)

# இலங்கைக்கு உதவிகளை வழங்க ஜப்பான் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் மீள்குடியேறுபவர்களுக்கான மேலதிக மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு ஜப்பான் முன்வந்துள்ளது.

இதனடிப்படையில் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் ஊடாக 100 மில்லியன் யென்களை வழங்குவதற்கு ஜப்பான் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக இலங்கைக்கான ஜப்பானிய தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேறுகின்ற மக்களின் குடியிருப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான பண உதவி வழங்கல் போன்ற ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலய நடவடிக்கைகளுக்கு இந்த நன்கொடை பயன்படுத்தப்படவுள்ளது.

வட் மாகாணத்திற்கான ஜப்பானின் சகல உதவிகளும் பரந்துபட்ட வழிகளில் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும் மனிதாபிமான தேவைகளுக்கும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வருவதாக இலங்கைக்கான ஜப்பானிய தூதரகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை மேம்பாட்டு திட்டம், வவுனியா -கிளிநொச்சி மின்னிணைப்பு திட்டம், கண்ணிவெடி அகற்றுவதற்கான உதவி, யாழ்-மன்னார் மாவட்டங்களில் அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் வாழ்வாதார உதவி போன்ற விடயங்களுக்காக ஜப்பானின் நிதியுதவி பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த முயற்சியானது வட மாகாணத்தில் அதனை சூழவுள்ள பிரதேசங்களின் மக்களும் தத்தமது வாழ்வாதாரங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கு உதவும் என ஜப்பான் எதிர்பார்க்கின்றது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் மீள் எழுச்சிக்கும் இலங்கையில் அபிவிருத்திக்கும் தனது துரித உதவிகளை இலங்கை அரசாங்கம், சர்வதேச சமூகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் ஜப்பான் தொடர்ந்தும் வழங்கும் என அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இலஞ்ச ஊழல் முறைப்பாடுகளை — விசாரிப்பதில் தாமதம் —

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் நிலவும் விசாரணை அதிகாரிகளுக்கான பற்றாக்குறையால் முறைப்பாடுகளை விசாரிப்பதில் சிரமங்கள் ஏற்படுவதாக அதன் தலைவரும் முன்னாள் நீதியரசருமான கே. பாலபட்டபெந்தி தெரிவிக்கின்றார்.

நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விசாரணை அதிகாரிகளை சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

விசாரணை பிரிவின் பணிப்பாளர்மற்றும் பிரதிப் பணிப்பாளர் ஆகிய பதவி வெற்றிடங்களையும் விரைவில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)





உங்கள் எண்ணங்களை நிறைவேற்றும் லீஸிங் பங்காளி

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி வழங்கும் நேஷன்ஸ் லீஸிங் சேவையின் மூலம் உங்களுக்கு தேவையான வாகனம் அல்லது இயந்திர உபகரணங்களை இலகுவாகவும் சிறந்த கொடுப்பனவு முறையிலும் இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்.

அருகிலுள்ள நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியை நாடுங்கள்

அழையுங்கள்: (011) 4 791 777
(011) 4 218 218

www.nationstrust.com

Nations Trust Bank PLC · PQ 118

Nations Trust Bank
Nations Leasing

www.sagittarius.lk


# கடற்படை மத்திய நிலையத்துடன் தமிழில் தொடர்புகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

## விஜயகலா எம்.பியிடம் மீனவர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மீன்பிடி தொடர்பாடலின்போது கடற்படை மத்திய நிலையத்துடன் தமிழ்மொழியில் தொடர்புகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடமராட்சி இன்பருட்டி மீனவர் சங்கப் பிரதிநிதிகள் விஜயகலா மகேஸ்வரன் எம்.பி யிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில், ஆழ் கடல் மீன்பிடியில் ஈடுபடும் வள்ளங்களில் கடற்படையின் மத்திய நிலையத்துடன் தொடர்பு கொள்ளும் தொடர்பாடல் வலையமைப்பு காணப்படுகிறது. இந்த தொடர்பாடல் வலை யமைப்பினூடான தொடர்பாடல்கள் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளிலேயே இடம் பெறுகின்றன.

இந்த மொழிகள் எமக்கு தெரியாதமையினால் நாம் உரியவகைளில் தொடர்பாடல்களை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் நாம் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றோம். ஆபத்தொன்று ஏற்பட்டால் கூட உரியவகையில் தொடர்பாடலை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

எனவே தமிழ் மொழிமூலம் தொடர்பாடலை மேற்கொள்ளும் வகையில் தொடர்பாடல் மத்திய நிலையத்தில் தமிழ் தெரிந்த உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள் எம்.பியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தவிடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த விஜயகலா மகேஸ்வரன் ,மீன்பிடித் தொழிற்றுறை அமைச்சர் ராஜித சேனாரட்னவுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளார். (ஸ்ரீ-4)

# இடம்பெயர் மக்களுக்கு உதவிகளை வழங்குவதில் நெருக்கடி நிலைமை

## யு.என்.எச்.சி.ஆர் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வாழும் மற்றும் மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இடம்பெயர் மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு போதியளவு நிதி உதவிகள் கிடைக்கப் பெறவில்லை என குறிப்பிட்டுள்ளது. அண்மையில் சில நாடுகள் ஓரளவு நிதி உதவிகளை வழங்கியுள்ளதாகவும் அல்லது பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்க நேரிட்டிருக்கும் என ஐக்கிய நாடுகளுக்கான அகதிகள் முகவர் நிறுவனத்தின் இலங்கை கிளைப் பொறுப்பாளர் மைக்கல் சாவாக் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ், சுவிற்சர்லாந்து மற்றும் கனடா போன்ற ஏற்கனவே உதவிகளை வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். அடிப்படை மனிதாபிமான உதவிகளை வழங்கக்கூடிய போதிலும் மேலதிக உதவிகளை வழங்குவதற்கு போதியளவு நிதி கைவசமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மீள் குடியேற்றப்பட்ட பிர தேசங்களில் மனிதாபிமான உதவிகளை வழங்குவதில் நெருக்கடி நிலமை ஏற்ப டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். 2011 ஆம் ஆண்டுக்கான மொத்த செலவுகளில் அரைவாசியளவு நிதியே கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பேருந்து குடைசாய்ந்ததால் 30 பயணிகள் காயம்

(கொழும்பு)

பதுளையில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 30 பேர் காயமடைந்த நிலையில் பதுளை பொது வைத்தியசாலையில் அனுமத்திக்கப்பட்டுள்ளனர்.

பதுளை புதுகேகந்த பிரதேசத்தில் இருந்து பதுளை நகரத்தை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று வீதியின் நடுவே குடை சாய்ந்ததில் மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது பேருந்தில் 60 இற்கும் மேற்பட்டவர்கள் பயணித்ததாகவும் அவர்களில் 23 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்துத் தொடர்பான விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# 344 கோடி ரூபா பெறுமதியான புலிகளின் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

344 கோடி ரூபா பெறுமதியான தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஆயுதங்கள், வேறும் இராணுவத் தளபாடங்கள் மற்றும் வெடிபொருட்கள் பாரியளவில் மீட்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு படையினரும் பொலிஸாரும் நடத்திய தேடுதல்களின் போது விமானத் தாக்குதல்கள் ஏவுகணைகள், பீரங்கிக் குண்டுகள்,தர்மோபெரிக், மோட்டார்குண்டு, ஆர். பி. ஜீ, நிலக்கண்ணி வெடிகள், கிளை மோர் குண்டுகள், தற்கொலை அங்கிகள், குண்டுகள் அதிநவீன ராடர்கள், பலரக துப்பாக்கி ரவைகள் உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# லோக்பால் மசோதாவில் பிரதமரையும் சேர்க்க வேண்டும்

## உச்ச நீதிமன்ற நீதிபதி கருத்து

மத்திய அரசு தயாரித்த லோக்பால் மசோதா, பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மசோதாவில் பிரதமரை ஊழல் விசாரணைக்கு உட்படுத்துமாறு குறிப்பிடப்படவில்லை.

ஆனால் பிரதமரையும், பிரதமர் அலுவலகத்தையும் இந்த மசோதாவில், ஊழல் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்ற நீதிபதி ஏ.கே.கங்குலி தெரிவித்தார்.

இது குறித்த அவர் மேலும் கூறுகையில், பிரதமரை லோக்பால் மசோதாவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடாது என்று கோருவதில் அர்த்தம் இல்லை.

பிரதமர் அலுவலகத்தை பொதுமக்களுக்காக சேவை செய்யும் அலுவலகமா கவே கருத வேண்டும் என்றார். டில்லியில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழா ஒன் றில் கலந்து கொண்டு உரையாற்றிபோதே அவர் மேற்கண்ட கருத்தை தெரிவித்தார். (ஸ்ரீ-4)

# தெலுங்கானா விவகாரத்தில் கட்சிகளுக்குள் குழப்பம்

## பாராளுமன்றத்தில் சிதம்பரம் தகவல்



தெலுங்கானா பிரச்சினையில் காங்கிரஸ் இன்னும் உறுதியான நிலைப்பாட்டை எடுக்கவில்லை. பாராளுமன்றமும் தேசிய கட்சிகளும் இவ்விடயத்தில் உதவலாமே தவிர, இறுதி முடிவு, தெலுங்கு பேசும் மாநில மக்களின் கைகளில்தான் உள்ளது என மத்திய அரசு அறிவித்துள்ளது.

தெலுங்கானா தனி மாநில கோரிக்கை குறித்து பாராளுமன்றில் நேற்று முன்தினம் விவாதம் நடைபெற்றது. இது குறித்த கவன ஈர்ப்பு தீர்மானத்தை லோக்சபாவில் எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் கொண்டு வந்தார். அப்போது அவர், தெலுங்கானா மசோதாவுக்கு எங்களது கட்சி முழு ஒத்துழைப்பை, ஆதரவை வழங்கும். தெலுங்கானா கோரிக்கைக்காக பல எம்.எல்.ஏ.க்களும், நிறைய எம்.பி.க்களும் தங்களின் பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

இவ்விடயத்தில், அரசு விரைவாக முடிவெடுக்க வேண்டும் என்றார்.

இதன்பின் இறுதியாக பதிலுரை அளித்து, உள்துறை அமைச்சர் சிதம்பரம் பேசியதாவது, தெலுங்கானா தனி மாநில கோரிக்கை என்பது மிக முக்கியமான பிரச்சினை. இதில். காங்கிரஸ் தன் நிலைப்பாடு குறித்து இன்னும் தெரிவிக்கவில்லை.

ஆந்திராவைச் சேர்ந்த மிக முக்கிய அரசியல் கட்சிகளான தெலுங்கு தேசம் கட்சி, முஸ்லிம் முஜ்லிமி மற்றும் புதிதாக தோன்றியிருக்கும் வை.எஸ்.ஆர். காங்கிரஸ் ஆகிய கட்சிகள், இன்னும் தங்களின் நிலைப்பாட்டை தெளிவாக சொல்லாமல் உள்ளன. தெலுங்கானா கோரிக்கையை, தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி, இந்திய கம்யூனிஸ்ட், பா.ஜ. ஆகிய கட்சிகள் ஆதரிக்கின்றன. அதேசமயம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தெலுங்கானாவை எதிர்க்கிறது. இறுதி முடிவு தெரியும் வரை பேச்சுவார்த்தைகளும் ஆலோசனைகளும் தொடர்கின்றன. பேச்சுவார்த்தைக்கு எப்போதுமே, அரசு தயாராக இருந்து வருகிறது. இவ்விடயத்தில் பாராளுமன்றமும் தேசிய கட்சிகளும் தீர்வை நோக்கிய நடவடிக்கைகளில் வேகம் ஏற்படுத்த துணை நிற்கலாமே ஒழிய, தீர்வு என்பது மக்களின் கைகளில்தான் உள்ளது. (ஸ்ரீ-2)

# காஷ்மீர் பண்டிற்கள் மீது தாக்குதல்; அமெரிக்கா கண்டன தீர்மானம்

(வோஷிங்டன்)

காஷ்மீர் பண்டிற்களின் மனித உரிமைகள் மீறப்பட்டு அவர்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளதை கண்டித்து அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் ஜனநாயக காங்கிரஸ் உறுப்பினர் பிராங் பலேன் தீர்மானம் கொண்டுவந்தார்.

இது தொடர்பான தீர்மானத்தை செனட்டில் தாக்கல் செய்து பிராங் பலோன் கூறியதாவது, காஷ்மீரில் பூர்வாங்க குடிமக்கள் காஷ்மீர் பண்டிற்கள் தான். 1989 ஆம் ஆண்டில் ஜம்முகாஷ்மீரில் சுமார் 4 இலட்சம் பண்டிற்கள் வசித்து வந்தனர். இப்போது இந்த எண்ணிக்கை 4 ஆயிரமாக குறைந்து விட்டது.

இதற்கு காரணம் தீவிரவாதிகளின் நடவடிக்கைதான். பெரும்பான்மையாக இருந்த காஷ்மீர் பண்டிற்கள் இப்போது சிறுபான்மையினராக ஆக்கப்பட்டுவிட்டனர். அவர்களை துன்புறுத்தியும் அச்சுறுத்தியும் தீவிரவாதிகளும் வேறு சில அமைப்பினரும் ஜம்மு காஷ்மீரில் இருந்து விரட்டியடித்து விட்டனர்.

இவ்வாறு விரட்டப்பட்ட காஷ்மீர் பண்டிற்கள் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் அகதிகளாக தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதனால் காஷ்மீரில் மத உரிமையும் மனித உரிமையும் மீறப்பட்டுள்ளது. வெளிநாட்டு பயங்கரவாத குழுக்களாலும் பண்டிற்கள் தாக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டு அங்கிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டதாக சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது. கடந்த 20 ஆண்டுகளாக பண்டிற்களின் மத உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன.

எனவே காஷ்மீரில் பதுங்கியுள்ள தீவிரவாத குழுக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட வேண்டும். அவர்களின் நடவடிக்கைக்கு உரிய தண்டனையை அவர்கள் அடைந்தே தீரவேண்டும். இதன்மூலம் அங்கு காஷ்மீர் பண்டிற்கள் அவர்களது மதம் கலாசாரத்துடன் மீண்டும் வாழ வகை ஏற்படும் என தீர்மானத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-4)

# பொதுநலவாய முறைகேடு; பிரதமருக்கும் பொறுப்பு

பொதுநலவாய விளையாட்டுப் போட்டியை நடத்தும் பொறுப்பு சுரேஷ் கல் மாடியிடம் போனதற்கு பிரதமரே பொறுப்பு என்கிறது தலைமை கணக்கு கணிக்கையாளர்களின் அறிக்கை.

கடந்த 2010 ஆம் ஆண்டு டில்லியில் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் நடந் தன. அப்போது மிகப்பெரிய அளவில் முறை கேடுகள் நடந்ததாக புகார் எழுந்தன.

இதையடுத்து பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளின் ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் சுரேஷ் கல்மாடி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந் நிலையில், இந்த முறைகேடுகள் குறித்து ஆய்வு நடத்திய மத்திய தலைமைக் கணக்குத் தணிக் கையாளரின் அறிக்கை கடந்த வெள்ளிக் கிழமை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய் யப்பட்டது.

போட்டியின் ஏற்பாடுகளில் மிகப் பெரிய அளவில் முறைகேடுகளும், வீண் செலவுகளும் செய்யப்பட்டுள்ளதுடன், ஒப்பந்தங்கள் வழங்குவதில் வேண்டப்பட்டவர்களுக்கு சலுகைகளும் காட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ - 4)

# சோமாலியாவில் பட்டினிக் கொடுமை மோதலில் 7 பொதுமக்கள் பலி

(மொகாடிசு)

ஆபிரிக்க நாடான சோமாலியாவில் கடும் வரட்சி நிலவுகிறது. இதனால் அங்கு வாழும் சுமார் 11 இலட்சம் மக்கள் சாப்பிட உணவு இன்றி பசி பட்டினியால் தவிக்கின்றனர். எனவே அவர்களுக்கு உலக உணவு திட்டத்தின் சார்பில் சாப்பாடு வழங்கப்பட்டு வருகிறது.

அதற்காக ரூ 4 ஆயிரம் கோடி தேவைப்படுவதாகவும் அவற்றை உலக நாடுகள் வழங்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சோமாலியாவில் பட்டினியால் வாடும் மக்கள் அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் பாட்பாபோ முகாமில் தங்கியிருந்த மக்களுக்கு உணவு பொருட்கள் எடுத்து வரப்பட்டன. அதை அறிந்ததும் பசியால் தவித்த மக்கள் அவற்றை பெற முண்டியடித்தபடி திரண்டனர். உடனே அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் அவர்களைக் கட்டுப்படுத்தினர். இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் இராணுவத்தினரை தாக்கியதால் இரு தரப்பினருக்கும் இடையே சண்டை ஏற்பட்டது.

அதைத்தொடர்ந்து அவர்களுக்கு இடையே துப்பாக்கி சண்டை நடந்தது. அதில் பொது மக்கள் 7 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயம் அடைந்தனர். (ஸ்ரீ-2)

# உலக சாதனைக்காக சிங்கத்துடன் 35 நாள் தங்கும் உக்ரைன் வாலிபர்



(வாசிலிகா)

உலக சாதனை படைப்பதற்காக சிங்கத்துடன் 35 நாட்கள் தங்கும் திட்டத்தோடு உக்ரைன் நாட்டைச் சேர்ந்த ஒரு வர் அதன் குகைக்குள் நுழைந்திருக்கிறார். உக்ரைன் வாசிலிகா நகரை சேர்ந்தவர் அலைக் ஸாண்டர் (வயது-40). இங்கு மிருகக் காட்சிசாலை நடத்தி வருகிறார்.

இவரது மிருகக் காட்சி சாலையில் கத்யா என்ற பெண் சிங்கம், சாம்சன் என்ற ஆண் சிங்கம், கரடிகள் மற்றும் பூனைகள் உள்ளன.

தனது மிருகக்காட்சிச் சாலைக்கு நிதி திரட்டுவதற்காகவும் உலக சாதனை படைப்பதற்காகவும் பெண் சிங்கத்துடன் 35 நாட்கள் தங்கும் முடிவோடு கடந்த 4 ஆம் திகதி முதல் அதன் குகைக்குள் சென்றுள்ளார். குகையில் வெப் கமரா, கழிப்பறைவசதி மற்றும் குளியலறைவசதி செய்யப்பட்டுள்ளது. இது பற்றி அலெக்ஸாண்டர் கூறுகையில், கத்யா தற்போது கர்ப்பமாக உள்ளது. இந்த மாத மத்தியில் அது குட்டி போடும். அதற்கு நான் உதவுவேன். கொடிய மிருகமாக இருந்தாலும் இதுபோன்ற நேரத்தில் அரவணைப்பை விரும்பும்.

நான் ஒரு ஓவியன். குகையில் எப்போதும் ஓவியம் வரைந்து கொண்டிருப்பேன். விலங்குகளுக்கு சிகரெட், பீர் வாசனை எரிச்சலூட்டும். எனவே அவற்றை முற்றிலும் தவிர்க்கின்றேன் என்றார்.

அமெரிக்காவின் புளோரிடாவை சேர்ந்த ஜேம்ஸ் ஜாப்லான் என்பவர் சிங்கத்தோடு 2 வாரங்கள் தங்கியதே இதுவரை உலக சாதனையாக இருக்கிறது. இதை முறியடிக்கும் நோக்கத்தோடு குகைக்குள் புகுந்திருக்கிறார் அலெக்ஸாண்டர். (ஸ்ரீ-4)

# சிரிய நாட்டின் ஜனாதிபதிக்கு மேற்குலக நாடுகள் கண்டனம்

சிரிய ஜனாதிபதி பசர் அல் அசாத்தின் நடவடிக்கைகளுக்கு மேற்குலக நாடுகள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது. அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் ஜனாதிபதி பசாரின் நடவடிக்கைகளை கடுமையாக விமர்சனம் செய்துள்ளனர்.

அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது சிரிய படையினர் மூர்க்கத்தனமாக தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் இதனை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் குறித்த நாடுகள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம் நடைபெற்ற எதிர்ப்பு போராட்டங்களின் போது படையினர் நடத்திய தாக்குதல்களில் 13 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிரியமக்களுக்கு எதிராக அந்நாட்டு அரசாங்கம் அடக்குமுறைகளை பிரயோகித்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடுமையாக அரச எதிர்ப்பு போராட்டங்கள் நடத்தப்பட்ட ஹாமா நகரத்தை அரச படையினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கடந்த மார்ச் மாதம் முதல் நடைபெற்று வரும் தாக்குதல்களில் குறைந்தபட்சம் 2 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என மனித உரிமை அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

சிரியாவில் இடம்பெற்று வரும் வன்முறைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு பேரவையும் அதிருப்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

எல்லாரும் ஏறி இளைத்த குதிரையில் நம்ம ஊர் சக்கடத்தார் ஏறி சறுக்கி விழுந்தாராம்.

– தமிழ்ப்பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அரசு-கூட்டமைப்பு நடத்திய பேச்சுக்கள் சர்வதேச அழுத்தத்தைக் குறைக்கும் ஒத்தணம்

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு கிடைக்கும் என தமிழ் மக்கள் ஒரு போதும் நம்பியிருக்கவில்லை.

முன்னைய ஆட்சியாளர்கள் முதல் இன்றைய அரசுவரை தாம் எவ்வாறு ஏமாற்றப்பட்டனர் என்பதை தமிழ் மக்கள் நன்குணர்ந்துள்ளனர்.

அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒற்றுமையுடன் இயங்காததையும் மக்கள் நன்கு தெரிந்து கொண்டுள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்துவது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி, சர்வதேச அழுத்தங்களுக்கு ஒத்தணம் கொடுப்பது அதன் நோக்கமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகத் தம்மைக் காட்டிக்கொள்வது, அதன்மூலமாக அரசியலில் தமது ஸ்திரத்தன்மையை நிலைநிறுத்துவதுமே அதன் இலக்காகும்.

ஆக, இரண்டு தரப்புமே தத்தம் சுயநலனுக்காகப் பத்துத் தடவைகள் பேச்சு நடத்தியிருந்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அரசியல் ஞானம் இருந்திருக்குமாயின், அரசுடன் இரண்டு தடவைகள் நடத்திய பேச்சுவார்த்தையோடு அரசின் நோக்கத்தை தெரிந்து கொண்டிருக்க வேண்டும்.

ஆனால் பத்து தடவைகள் பேசப்பட்டன என்றால் அரசைக் காப்பாற்றும் நோக்குடையவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் இருக்கிறார்கள் என்பதே பொருள்.

உண்மையில் வன்னிப் போர் வெற்றிக்குப் பின்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் எண்ணம் அரசிற்கு இம்மியும் கிடையாது என்பதே நிஜம்.

விடுதலைப்புலிகளை அழித்துவிட்டோம். இனி தீர்வு எதற்கு என்ற கேள்வி அரச தரப்பிடம் இருந்ததை சாமானியர்களால் கூட உணர முடியும்.

ஆனால், அந்த உண்மையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் உணரமுடியாது போனது ஏன்?

எல்லாமுமே நாடகம். எவர் எந்தப் பக்கம் என்று சொல்ல முடியாத அளவிற்கு நம் அரசியல் தலைமைகள் சிறப்பாக நடிக்கின்றன.

வீடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இராஜதந்திரம் அரசுடன் பேசுவதாக இருந்திருக்கக் கூடாது.

அரசுடன் பேசிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என்ற முடிபை கூட்டமைப்பு எடுத்துக் கொண்டதன் மூலம், அதன் இராஜதந்திரம் மிகவும் பலவீனமாக உள்ளதென்பது நிருபணமாகின்றது.

தமிழினம் போரில் தோற்றுப் போனமை நிஜமானதாகினும் அந்தத் தோல்வியின் மறுமுனையில் சர்வதேச ஆதரவும் அனுதாபமும் தமிழர்கள் பக்கம் திரும்பியுள்ளது என்ற உண்மையையும் புரிந்து கொள்ள வேண்டும்.

சர்வதேச சமூகமும் சர்வதேச ஊடகங்களும் எங்களுக்காக குரல் கொடுக்கும் போது, நாங்கள் சிந்தனை அற்றவர்களாக ஏகப்பிரதிநிதித்துவம் பேசிக்கொண்டு பதினொராவது தடவையும் அரசுடன் பேசும் வாய்ப்புக்காக காத்திருக்கின்றோம்.

என்ன செய்வது? குளத்தில் தவளையும் தாமரையும் ஒன்றாக இருந்தாலும் தாமரையில் இருக்கும் தேனை தவளைகள் ஒருபோதும் அறிந்ததும் இல்லை. தேனை அருந்தியதும் இல்லை.

# இலங்கைப் பணியாளர்கள் 41 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

20 மாத கொடுப்பனவுகள் வழங்கப்படாத நிலையில் ஈராக்கில் தங்கியிருந்த 41 பணியாளர்கள் நாடு திரும்பியுள்ளனர்

தமக்குரிய 20 மாதங்களுக்கான கொடுப்பனவுகள் கிடைக்காத நிலையிலேயே நாடு திரும்புவதாக இலங்கைப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் ஈராக்கிய அரசாங்கம் தமக்கு மூவாயிரம் டொலர்களை அன்பளிப்பாக வழங்கியதாக நாடு திரும்பிய பணியாளர்களின் பிரதிநிதி லலித்ஷியாமல் குறிப்பிட்டார். ஈராக்கில் தாங்கள் பணியாற்றிய நிறுவன உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித் துள்ளதாக அவர் கூறினார்.

இலங்கையின் பாதுகாப்புப் பிரிவில் சேவையாற்றி அதிலிருந்து சட்ட ரீதியாக விலகி, ஈராக்கிலுள்ள நிறுவனங்களில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக சேவையாற்றியதுடன், எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படாமையால் மூன்று சந்தர்ப்பங்களில் உண்ணா விரதத்திலும் இவர்கள் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

# ஆப்கானில் நேட்டோ ஹெலி சிதறியது; 38 படையினர் பலி

(காபுல்)

ஆப்கானிஸ்தானில் நேட்டோ படையினரின் ஹெலிகொப்டர் ஒன்று வீழ்ந்ததால் அமெரிக்கப் படையினர் 31 பேரும் ஆப்கானிஸ்தான் படையினர் 7 பேரும் பலியாகியுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் வார்டாக் மாகாணத்தில் நேற்று முன்தினம் சினூக் ரக ஹெலிகொப்டரொன்று விழுந்து நொருங்கியதாக ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

2001 ம் ஆண்டு முதல் ஆப்கானிஸ்தானில் யுத்தத்தில் பங்குபற்றி வரும் வெளிநாட்டுத் துருப்புக்கள் மிக அதிக எண்ணிக்கையில் உயிரிழந்த தனியொரு சம்பவம் இதுவாகும்.

இதற்கான காரணத்தை ஆராய்ந்து வருவதாக நேட்டோ மற்றும் ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும் நேட்டோ ஹெலிகொப்டரை தான் சுட்டு வீழ்த்தி யதாக தலிபான் அமைப்பு உரிமை கோரியுள்ளது.

உயிரிழந்த அமெரிக்க மற்றும் ஆப்கானிஸ்தான் படையினரின் குடும்பங்களுடனும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுடனும் தான் ஆழ்ந்த துயரத்தை பகிர்ந்து கொள்வதாக ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்ஸாய் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். (ந-5)

## கிரிக்கெட் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டு கழகம் 2010ஆம் ஆண்டு நடத்திய யாழ் நகரில் சிறந்த கழக அணியை தெரிவு செய்யும் நிகழ்வில் புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அணிகளுக்கிடையிலான முக்கோண வெற்றிக் கிண்ணப் போட்டியின் முதல் போட்டியில் இன்று யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் கழக அணி மோதவுள்ளது. (ந)

## கல்விமாணி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

கல்விமாணி 2 ஆம் வருட மாணவர்களின் கற்கைநெறி வகுப்புக்கள் நாளைதிங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என இணைப்பாளர் சி.தயாபரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## சித்திரத்தேர் வெள்ளோட்டமும் தேர் மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

அல்வாய் வேலிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான சித்திரதேர் வெள்ளோட்டமும் தேர் மலர் வெளியீடும் நாளை திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்/வல்வை சிவகுரு வித்தியாசாலை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை கரவெட்டி பிரதேச செயலர் ச. சத்தியசீலன் ஆற்ற, மதிப்பீட்டுரையை யாழ்/ஹாட்லி கல்லூரி ஆசிரியை கல்யாணி நமசிவாயம் நிகழ்த்துவார்.

நூலின் முதற் பிரதியை பருத்தித்துறை மகாலட்சுமி தொழில் அதிபர் பொ.இராசதுரை பெறுவார்.

அத்தடன் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு அம்மன், விநாயகர், சுப்பிரமணியர் சித்திரத்தேரில் வீதியுலா வரும் நிகழ்வு இடம்பெறும். (ஸ்ரீ-2)

# அருள் உள்ள ஆசைக்காய் ஆண்டவரோடு இணைந்து ஆசைப்படுவோம் (மத்14:22-36)

இயேசு இயற்கை சக்திகளை அடக்குகின்ற வல்லமை கொண்டவர் என்பதை இன்று நற்செய்தியில் பார்க்கின்றோம். இதன் நடுப்பகுதி இயேசு கடல் மீது நடந்து சென்ற அதிசயத்தை காட்டுகின்றது. "மக்களை அனுப்பி விட்டு இயேசு இறைவனிடம் தனியே இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலையின் மேல் ஏறினார். பொழுது சாய்ந்த பிறகும் அங்கே அவர் தனியே இருந்தார்" என நற்செய்தியின் ஆரம்ப பகுதியில் காண்கின்றோம்.

மக்களுக்கு பணி செய்கின்ற அதே

## பரமபிதா காட்டிய பாதை

வேளையில் இயேசு இறைவனோடு ஒன்றிணைந்திருக்கும் நிலையை ஒரு போதும் மறந்ததில்லை. அவ்வப்போது இயேசு தனிமையை நாடினார். அத்தனிமையின் போது இவர் தம் இறை தந்தையோடு ஆழ்ந்த உரையாடலில் ஈடுபட்டார். தந்தையோடு தமக்கிருந்த உறவினை இயேசு புதிப்பித்து ஆழப்படுத்திக் கொள்ள அவர் அவ்வப்போது நேரம் ஒதுக்கினார்.

எனவே இறையுறவில் நாமும் ஆழமாக ஊன்றியிருக்க இயேசுவைப் போல நாம் நம்மையே கடவுளிடம் கையளிக்க வேண்டும். கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவதே தமக்கு உணவு என்று இயேசு கூறினார்.

மக்களை அனுப்பிவிட்டு தனியே கடவுளோடு இருந்த இயேசு தொடர்ந்து கடல் மேல் நடக்கின்றார். இதை கண்ட பேதுரு கடலில் குதித்தார். அடியெடுத்து வைத்தார். ஆண்டவரை நோக்கி இன்று மனிதனுக்கு இறைவனைப்போல் தானும் செய்ய வேண்டும் என்ற ஆசை. பேதுருவுக்கு இயேசுவைப்போல் கடலின் மேல் நடக்க வேண்டும் என்று ஆசை வந்தது. இயேசு அதை தவறு என்று கூறவில்லை. பேதுருவை அனுமதித்தார்.

நம்பிக்கை குறைவின் காரணமாக பேதுரு நிலைகுலைந்து கடலில் மூழ்கப் போனார். நமது வாழ்வில் நாம் நிலைகுலைகின்ற நிகழ்வுகள் நடந்துவிட்டால் நமது வாழ்வை நாம் ஆய்வு செய்துபார்க்க வேண்டும்.

ஆண்டவரே என்னை காப்பாற்றும் என்று பேதுருவைப்போல் இறை பராமரிப்பில் நம்பிக்கை கொள்ள வேண்டும். எங்களை கை தூக்கிவிடுபவர் கடவுள்.



பேதுருவுடைய நம்பிக்கையின்மை, பயம், ஆணவம், தெய்வீக வலுவின்மை இவையே அவர் மூழ்குவதற்கு காரணமாயிருந்தன.

அருளால் ஆண்டவனோடு இணைந்து ஆசைப்படுவோம். கடலிலும் நடக்காமல் மலையையும் தாண்டலாம் "எனக்கு வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு என பவுல் பிலிப்பியர் 4:13 கூறுவதை வாழ்வாக்குவோம்.

**ம. பிரான்சிஸ்க், கத்தோலிக்க சுதந்திர, பத்திரிகையாளர்.**

# மாலைதீவுடன் புதிய கடல்சார் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது

(கொழும்பு)

இலங்கை மீனவர்கள் கடற்பிராந்தியத்திற்கூடாக அரபு கடலுக்குச் செல்வதற்கேற்ப மாலைதீவுடன் இலங்கை புதிய கடல்சார் ஒப்பந்தமொன்றை செய்துள்ளது.

அண்மையில் மாலைதீவுக்கு விஜயம் செய்த பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

அரபுக் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் இலங்கை மீனவர்கள் மாலைதீவு கடற்பிராந்தியத்திற்குள் ஊடுருவுவதைத் தவிர்ப்பதற் காக நீண்ட தூரம் பயணம் செய்கின்றனர். இப்போது புதிய உடன்படிக்கையின்படி இல ங்கை கடற்கலமொன்று வருவதாக 48 மணித்தியாலயங்களுக்குமுன்தொலைநாகல் அல்லது மின்னஞ்சல் மூலம் மாலைதீவு அதிகாரிகளுக்கு அறிவித்தால் மாலைதீவு கடற்பரப்பிற்கூடாக பயணம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். இதன் மூலம் நேரத்தையும் எரிபொருளையும் மீதப்படுத்தலாம் என பிரதியமைச்சர் நியோமல் பெரேரா கூறினார்.

எவ்வாறெனினும் மாலைதீவு கடற்பரப்பில் இலங்கையர்கள் மீன்பிடிப்பது தடை செய்யப்பட்டிருக்கும். மாலைதீவு அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 7 படகுகளை விடுவிக்கச் செய்வதற்கும் இவ் விஜயத்தின்போது பிரதியமைச்சர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

அத்துடன் தனது கணவரை கொன்றதாக குற்றம்சுமத்தப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் தற்கொலைக்கு முயன்ற இலங்கைப் பெண்ணொருவரை தாதியொருவர் துணையுடன் இலங்கைக்கு அனுப்பப்படுவதற்கும் அவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். (ஸ்ரீ-2)

# நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கீழுள்ள தொழிற்சங்கங்கள் சிலவற்றினால் சட்டப்படி வேலை தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நீர் வழங்கல் பொறியியல் உதவியாளர்களுக்கான பதவியுயர்வு தொடர்பில் விநியோகிக்கப்பட்டுள்ள சுற்றிக்கையை இரத்து செய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு ஊழியர் சங்கத்தின் செயலாளர் உபாலி ரத்னாயக்க குறிப்பிட்டார்.

இதன் காரணமாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற நீர் வெட்டுக்களை வழமைக்கு கொண்டு வருவதில் பிரச்சினை தோன்றியுள்ளதாகவும் மேலதிக நேர வேலை மற்றும் சம்பந்தப்படாத கடமைகளில் ஈடுபடாதிருப்பதற்கும் சனி, ஞாயிறு தினங்களில் சுழற்சி முறை வேலையில் இருந்து ஒதுங்கிக் கொள்வதற்கும் தமது சங்கம் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் கருணாரத்ன ஹெட்டி ஆராச்சி தெரிவிக்கையில், மக்களுக்கு எவ்வித தடங்கலுமின்றி நீர் விநியோகத்தைத் மேற்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# ஐ.தே.க.தலைமைத்துவத்தை மாற்றத் தேவையில்லை

## மங்கள சமரவீர எம்.பி.தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்திற்கு எவ்விதமான தேவைகளும் இல்லை, தலைவருக்கான வெற்றிடமும் இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப்பேச்சாளர் மங்கள சமரவீர கட்சியின் மீளமைப்பு தரப்பினர் மீது கடும் விமர்சனங்களை தெரிவித்துள்ளார்.

தமது கருத்து தொடர்பில் எவராவது பிழை காண்பாராக இருந்தால் அவர்கள் தமது சொந்த அரசியலை கட்சிக்கு புகுத்த முனைபவர்களாகவே இருப்பர் என்று மங்களசமரவீர குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் மீளமைப்பை எதிர்பார்ப்பவர்கள் கட்சியின் தலைமையை எதிரியாக பார்க்கின்றனர் எனினும் குறித்த மீளமைப்பாளர்களுக்கு கட்சியின் தலைமை எதிரியல்ல என்ற விடயம் புரியவேண்டும்.

இலங்கை இன்று உலகத்தில் தனிமைப்படுத்தப்படும் நிலைக்கு உள்ளாகியுள்ளது. இதனை தடுத்து நிறுத்த எதிராக இருக்கும் அரசாங்கமே ஐக்கிய தேசிய கட்சி மீளமைப்பாளர்களின் எதிரியாக இருக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி உள்ளூராட்சி தேர்தலில் தோல்வி கண்டமைக்கு அரசாங்கத்தின் எதிர்செயற்பாடுகளும் கட்சியின் தேர்தல் தொகுதிகளில் காணப்படும் பிரச்சினைகளுமே காரணமே அன்றி கட்சியின் தலைமைத்துவம் அல்ல என்று மங்கள சமரவீர சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)


THE ART OF LIVING

"ஜெய் குருதேவ்"



எப்பொழுதும் ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் வாழ

**வாழும்கலைப் பயிற்சி**

(மூச்சு பயிற்சி, பிரணாயாமம்,
சுதர்சன கிரியா, யோகாசனம் தியானம்)

**இடம்:-** 132, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

**காலம்:-** 08/08/2011 (திங்கட்கிழமை)

**நேரம்:-** மாலை 5.00 (அறிமுகவுரை)

**அனைவரும் வருக பயன்பெறுக**

தொடர்பு: -0777740593 , 0770474757

(இ)




யாழ்.கோட்டை முனீஸ்வரன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தேரில் சுவாமி எழுந்தருளி அருள்பாலிப்பதைப் படத்தில் காணலாம்.

# கட்டுத்துவக்கு வெடித்ததில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கொழும்பு)

திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காட்டுப்பகுதியில் கட்டுத்துவக்கு வெடிவிபத்தில் சிக்கிய குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 7 மணிக்குஇடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சேருநுவரவைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான எச்.எம்.சிங்ஹபால (வயது-44) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் தனது மனநலம் பாதிக்கப்பட்ட மகனை தேடிச் சென்ற வேளையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடிவிபத்தில் சிக்கியுள்ளார். இவரை திருகோணமலை பொது வைத்தியசாலையில் உடனடியாக அனுமதித்து சத்திரசிகிச்சை வழங்கப்பட்டும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவரது சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத பரிசோதனை அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# பின்லாந்துக்குள் நுழையமுயன்ற நான்கு இலங்கையர்கள் கைது

(கொழும்பு)

ரஷ்யா ஊடாக பின்லாந்துக்குள் நுழைய முற்பட்ட நான்கு இலங்கையர்களை கைது செய்துள்ள ரஷ்ய பாதுகாப்புத்தரப்பினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மலேசிய கடவுச்சீட்டைக்கொண்ட இந்த நான்கு இலங்கையர்களும் அங்கிருந்து லாவோஸ்,சீனா ஆகிய நாடுகளின் ஊடாக ரஷ்யாவின் கட்டுப்பாட்டிலுள்ள சைபீரியாவுக்கு புகையிரதத்தில் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

ரஷ்யாவின் சென் பீட்டர்ஸ் நகரிலிருந்து ஹெல்சின் நோக்கி சென்ற அதிவேக புகையிரதம் பின்லாந்துக்கு சட்டவிரோதமாக நுழைய முற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் குறிப் பிடுகின்றன.

இந்நிலையில் சட்டவிரோதமாக பின்லாந்துக்கு பிரவேசிப்பதற்காக பெரும்பாலானோர் இந்த வழியையே பயன்படுத்துவதாக ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதரகம் தெரிவிக்கிறது. (ஸ்ரீ-2)

# காரைநகரில் 55 பொதுமலசலகூடங்களும் 11 பொதுக்கிணறுகளும் அமைக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் 55 பொது மலசலகூடங்களையும் 11 பொதுக்கிணறுகளையும் அமைப்பதற்கு மீள் குடியேற்ற அமைச்சு அனுமதி வழங்கி 12 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

காரைநகரில் 11 கிராமங்களில் பொது மக்களின் வேண்டுகோளின் பிரகாரம் இம் மலசலகூடமும் பொதுக்கிணறுகளும் அமைக் கப்படவுள்ளது.

காரைநகரின் அல்வின் வீதி,மருதபுரம், கல்வந்தாழ்வு, வேரப்பிட்டி, நீலங்காடு, மடத்துவளை, தோப்புக்காடு, ஊரி, பிட்டியெல்லை, மதவடி, சயம்பு வீதி ஆகிய கிராமங்களில் தலா ஒரு கிணறும், ஐந்து மலசலகூடங்களும் அமைக்கப்படவுள்ளது.

இப்பொதுக்கிணறுகளும், பொது மலசலகூடங்களும் அமைக்கும் பணி இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-246)

# சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்க மேலும் 7 நாட்கள் கால அவகாசம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருப்போருக்கு மேலும் ஏழு நாட்கள் காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பொதுமன்னிப்புக் காலப்பகுதிக்குள் ஆயுதங்களை ஒப்படைப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏழு நாட்கள் கால அவசகாசம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த காலப்பகுதிக்குள் ஆயுதங்களை ஒப்படைக்க முடியும் எனவும் கிழக்கு மாகாண கட்டளைத்தளபதி பொனிபஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

பொதுமன்னிப்புக் காலம் முடிவடைந்ததன் பின்னரும் சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருக்கும் நபர்களை கைது செய்ய பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருக்கும் நபர்களுக்கு எதிராக தராதரம் பாராது நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சீறினார் டில்சான்; சிதறியது ஆஸி

# இலங்கை அணி அசத்தல் வெற்றி



(கண்டி)

திலகரட்ண டில்சானின் அதிரடிச் சதத்தின் மூலம் இலங்கை அணி 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தியது. இதன் மூலம் 2 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் இலங்கை அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் வந்துள்ள அவுஸ்திரேலிய அணி 2 இருபது-20, 5 ஒரு நாள், 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது இருபது-20 போட்டி நேற்று கண்டி பல்லேகல விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணித்தலைவர் கமரூன் வைற் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்ப துடுப்பாட்ட வீரர் மஹேல ஜெயவர்த்தன 11 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 11ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தார்.

அடுத்து வந்த சண்டிமல்லும் 11 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 5.3 ஓவர்களில் 42 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுகளை இழந்தது.

மறுமுனையில் அணித்தலைவர் திலகரட்ன டில்சானின் அதிரடி கைகொடுக்க இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கை விரைவாக உயர்ந்தது. அடுத்து வந்த சங்ககாரவும் சிறப்பான இணைப்பை வழங்கினார்.

இதில் குமார் சங்ககார 22 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து ஜீவன் மெண்டீஸ் களமிறங்க மறுமுனையில் அணித் தலைவர் டில்ஷான் 39 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

தொடர்ந்து அதிரடியாக துடுப்பெடுத்தாடிய டில்ஷான் 55 பந்துகளில் சதம் கடந்து அசத்த இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து198 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் திலகரட்ன டில்ஷான் 57 பந்துகளில் (15 பவுண்டரிகள், 5 சிக்ஸ்சர்கள் அடங்கலாக), 104 ஓட்டங்களையும் ஜீவன் மெண்டிஸ் 19 பந்துகளில் (4 பவுண்டரி உட்பட) 29 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் குவித்தனர்.

பந்து வீச்சில் பிரெட் லீ, ஜோன்சன், வோட்ஷன் தலா ஒரு விக்கெட்டை சாய்த்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில்199 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு வோட்சன் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

தொடர்ந்து வந்த மார்ஷ் 4, டேவிட் ஹசி6, அணித் தலைவர் 7 ஓட்டங்களுடன் டில்றுவான் பெரேராவின் சுழலில் வரிசையாக வெளியேறினர்.

அடுத்து களமிறங்கிய சிமித் 12, ஹடின் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து பிரகாசிக்க தவறினர்.

மறுமுனையில் சிறப்பாக ஆடிய ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் வோர்னர் 29 பந்துகளில்அரைச்சதம் கடந்தார்.

எனினும் வோர்னர் 31 பந்துகளில் (6பவுண்டரிகள், 2 சிக்சர்கள் உட்பட) 53 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.



தொடர்ந்து வந்த ஓ கீபி, ஜோன்சன் ஜோடி அதிரடியாக ஆடிய போதும் அவுஸ்திரேலி ய அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 163 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

இதன்மூலம் இலங்கை அணி 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில்முன்னிலை பெற்றது. துடுப்பாட்டத்தில் ஓ கீபி, ஜோன்சன் தலா 22 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் டில்றுவான் பெரேரா 3 விக்கெட்டுகளையும், குலசேகர 2 விக்கெட்டுகளையும், லக்மல், ஹேரத் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக இலங்கை அணித் தலைவர் திலகரட்ன டில்சான் தெரிவானார்.

---

## வடக்கில் மீள் குடி...

தித்தார். வடபகுதியில் மீளக் குடியேறிய மக்கள் இன்னமும் மிகவும் பலவீனமான நிலையில் இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

வடக்கின் எதிர்காலம் என்பது அங்கு மக்களில் முதலீடு செய்வது என்பதிலேயே தங்கியுள்ளது என்று அவர் கூறியுள்ளார். அவர்கள் தங்களது வாழ்க்கையை கொண்டுநடத்த அவர்களுக்கு தேவையான திறன்களை வளர்ப்பது, வாழ்க்கை வசதிகள் மற்றும் சமூக மேம்பாடுகள் ஆகியன அவசியமானவையாக இருக் கின்றன என்றும் அவர் கூறியுள்ளார். (ந-5)

---

## யாழ்.மாவட்டம்...

யாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டு விழாவிற்கு வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ரிஷாட் பதியுதீன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இவ் விளையாட்டுப் போட்டிகளின் முடிவில் யாழ். மாவட்டம் அதிக புள்ளிகளைப் பெற்று சம்பிய னானது. அத்துடன் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் முறையே அடுத்த இடங்களை பெற்றன. (ந-5)

---

## வவு.நகர...

யத் தவறின் குடும்ப உறுப்பினர் ஒருவரை இழக்கநேரிடும், அடுத்த இலக்கு நீங்கள்.

அதனைத் தொடர்ந்து வீடு குண்டு வைத்து தகர்க்கப்படும் எனவும் அந்த அச்சுறுத்தல் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாக மேற்படி பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

---

## முழு இலங்கைக்கும்...

நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றின் ஊடாக அனைத்துத் தரப்பினரின் கருத்துக்களைப் பெற்று, வடக்குக்கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரமன்றி தென் பகுதிக்கும் அமுல்படுத்தப்படும் வகையில் சகல இனங்களின் அடையாளங்களையும் பாதுகாத்து தேசிய ஒருமைப்பாட்டை பாதுகாக்கும்படியான அரசியல் தீர்வொன்றுக் குச் செல்லவேண்டும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

அப்படியான தீர்வுத் திட்டமான து இனங்களு க்கிடையிலான ஐக்கியத்தை மேலும் வலுப்படுத்துவதாக இருக்கவேண்டும் எனவும் நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

---

## வடபகுதி எங்கும் ...

வாழ்கின்ற வவுனியாவிலிருந்து அம் மக்களின் இதய பூமியான யாழ்ப்பாணத்தைச் சென்றடையும் வரை சிங்களமயமாக்கலால் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அவதானிக்கலாம்.

இலங்கைப் படைத்தரப்பின் ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாக பயணம் செய்பவர்களில் 90 சதவீதமானவர்கள் தமிழ் மக்கள் ஆவர். ஆனால் இங்கு கடமைபுரியும் படைத்தரப்பினர் கேட்கும் கேள்விகளுக்கு சிங்களத்திலேயே பதில் சொல்ல வேண்டும்.

தமிழ் மக்களின் தாயகப் பிரதேசத்தில் படைத்தரப்பினரின் முகாம்களும், படைத் தரப்பினரும் அதிகமாகக் காணப்படுகின்றனர்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் இடம்பெற்ற போர் முடிபுக்கு வந்ததனைத் தொடர்ந்து தமிழ் மக்களின் தாயகப் பிரதேசங்களில் 7 ஆயிரம் சதுர கிலோமீற்றரை படைத்தரப்பினர் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்துள்ளனர்.

அங்கிருந்த 2 ஆயிரத்து 500 இந்து ஆலயங்களும் 400 கிறிஸ்தவ ஆலயங்களும் அழிக்கப்பட்டுள்ளன. இந்த ஆலயங்களை மீண்டும் புனரமைப்பதற்கு அரசாங்கம் அனுமதிக்கவில்லை.

இப்பிரதேசங்களில் இருக்கின்ற படைத்தரப்பினர் மட்டுமே பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

ஆனால் இப் பிரதேசங்களில் கடந்த ஒரு சில ஆண்டுகளில் 2 ஆயிரத்து 500 புத்தர் சிலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

மன்னார் மாவட்டத்திலுள்ள திருக்கேதீஸ்வர ஆலயத்திலிருந்து 50 மீற்றர் தொலைவில் மகா தோட்டஇராஜ மகா விகாரை என்ற பெயரில் பௌத்த விகாரை ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

வட பகுதியில் வடக்கின் வசந்தம் என்ற பெயரில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுவரும் அபிவிருத்தித் திட்டத்தின் கீழேயே இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதேவேளை இத் திட்டத்தின் கீழ் மேற் கொள்ளப்பட்டுவரும் பல்வேறு அபிவிருத்தித் திட்டத்தின் பயன்கள் தமிழ் மக்களைச் சென்றடைவதில்லை. மாறாக அத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டுமாணப் பணிகளில் சிங்கள இளைஞர்களே ஈடுபடுத்தப்பட்டு வருவதுடன் இத் திட்டங்களுக்கான ஒப்பந்தகாரர்களாகவும் சிங்கள இனத்தவர்களேகாணப்படுகின்றனர் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

---


**அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையின்**

**பழைய மாணவர் பேராசிரியர்**

**மா.கருணாநிதி அவர்களின்**

**கௌரவிப்பு விழா**

**இடம்:** அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை, ஜெயபாலன் மண்டபம்.

**காலம்:** 07.08.2011 (இன்று) ஞாயிறு பிற்பகல் 4.30 மணி

**தலைமை:** செ.செல்வச்சந்திரன் (அதிபர்)

**வரவேற்புரை:** கி.கணேசன் (ஓய்வுபெற்ற அதிபர்)

**வாழ்த்துரை:** ப.செல்வராசா (வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி)

**பாராட்டுரைகள்:**

மு. அநாதரட்சகன் (உதவிக் கல்விப்பணிப்பாளர், யாழ். வலயம்), ஆ.க.மா. சிவபாதம் (சிரேஷ்ட சட்ட விரிவுரையாளர், சட்டபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்), க.கமலேஸ்வரன் (பிரதிப் பணிப்பாளர், பொதுத் திறைசேரி, கொழும்பு), எம். சிவகுருநாதன் -சட்டத்தரணி(L.L.B ஒட்டவா பல்கலைக்கழகம், கனடா), கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராசநாயகம் (சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியற்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), எஸ். வன்னியகுலம்M.A (முன்னாள் பணிப்பாளர், ரூபவாஹினி கூட்டுத்தாபனம், நிபுணத்துவ ஆலோசகர் நீர்ப்), பேராசிரியர் வி.பி.சிவநாதன்(தலைவர், பொருளியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர், வாழ்நாள் புவியியல் பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்),

**விழா நாயகர் கௌரவிப்பு**

பாடசாலையின் ஆரம்ப கால ஆசிரியர்களின் கௌரவிப்பு.

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு

**ஏற்புரை**

**நன்றியுரை :** க.சின்னராஜா B.A (J.P) செயலாளர். பழைய மாணவர் சங்கம்.

**நலன் விரும்பிகள்**

**அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலய பழைய மாணவ நலன்புரி சங்கத்தினர்.**

(தி-3959)

மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்

பேராசிரியர் க.தேவராஜா அவர்கள்



காட்சிக்கு எளியன் கடும் சொல்லறியாதான்
-பணிவுடையன் இன்சொலான்
பேச்சிற்கு இனியன் பெருந்தகையாளன்
நாட்டிற்கு சேவைசெய்யும் நல்லோன்
-ஏழைபங்காளன்
கல்வியறிவு ஒழுக்கமுயர்குலச் சான்றோன்
ஏட்டிலும் எழுத முடியாத பெருமைக்குரியோன்
-மக்கள் சேவையே
மகேசன் சேவையென வாழ்வோன் தன்னை அன்பு
காட்டியே வாழ்த்துகின்றோம். கனிந்துள்ளம்
-மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
கற்பகதருவாய்க் காலமெலாம் வாழிய! சிறந்து.

இடம்: இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி
காலம்: 14.08.2011 பி.ப. 02மணி (ஞாயிற்றுக்கிழமை)
பேராசிரியரின் அன்புள்ளங்கள் இதனை தனிப்பட்ட அழைப்பாகக் கருதி சமுகந் தரவும்.

—தேவா மணிவிழா சபை

வாழ்த்துவோர்:
சிவம் ரெக்ஸ்ரைல்
K.K.S. வீதி, இணுவில்.
(சி-3913)


## அரசாங்கம் உரிய...

நிலைப்பாடு வெளியிடப்பட்டால் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதில் சிக்கல் இருக்காது எனத் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது அரசாங்கம் உரிய முனைப்புக் காட்டத்தவறியுள்ளது.

இரண்டு வாரங்களுக்குள் தமது நிபந்தனைகள் குறித்த நிலைப்பட்டை வெளியிட வேண்டுமென வலியுறுத்தியுள்ளோம் என்றும் சுமந்திரன் தெரிவித்துள்ளார். (ந-5)


உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
TILKO hotels



No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com


## பேச்சுவார்த்தை தொடர வேண்டுமா...

அரச தரப்பு எழுத்தில் தங்கள் நிலைப்பாட்டை தெரிவிக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தையை தொடருவது அரசாங்கத்தின் கைகளிலேயே தங்கியுள்ளது என்றும் கூறினார். (ந-8)


அடகு நகை மீட்க அரிய சந்தர்ப்பம்

அடகு வைத்துள்ள உங்கள் நகைகளை இடம்மாற்றி, கூடிய தொகைக்கு மீள வைப்பதற்கு அல்லது மீட்டு விற்பதற்கு நாங்கள் உதவுவோம்.

(சேவைக் கட்டணம் 2% அறவிடப்படும்)

உடனே அழையுங்கள் CALL NOW 0774050936



IELTS BRITISH COUNCIL

IELTS FOR UK STUDENT VISA APPLICANTS

What is IELTS?

IELTS is the international English Language Testing System, the world's proven English language test. Over 1.5 million candidates took the test evetry year to start their journeys into international education and employment.



We Provide
1. A Placement test which determines to which level of English you belong Updated course modules
2. Materials approved by British Council which are quite new including Cambridge 8
3. 40 Practice test.
4. Free IELTS pack & Mock Exams

22.10.2011 IELTS இல் யாழ்ப்பாணத்தில் பரீட்சைகள் நடைபெறும்.
அதற்கு ஆயத்தப்படுத்தும் வகுப்பு

நீங்கள் எங்கு IELTS படித்திருந்தாலும் எமது நிலையத்தில் வந்து பதிவு செய்து பரீட்சை எடுக்க முடியும்.

IELTS Registration Centre For British Council

| | |
|---|---|
| Course Schedule | Sat & Sun |
| Duration | 10 Weeks |
| Time | 8.30 to 11.30 |

வகுப்புக்கள் ஆரம்பம் 13.08.2011

For registration and further details contact
CITY COLLEGE OF ENGLISH
No.143, Adiyapatham Road, Thirunelvely - Jaffna.
Tel. 021 3216027, 077 8803887
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)



Permit Holders

Car for a cheaper price

TOYOTA PREMIO- 4.0MILLION
TOYOTA ALLION -3.9 MILLION
TOYOTA AXIO - 3.4 MILLION



Contact:
077-3754040

SMART KINGS (PVT) LTD
DIRECT IMPORTERS OF JAPANESE VEHICLES
684,Colombo Road, Kurana,Negombo. TEL:031-5678901,031-5678902



DHL

உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

வடமாகாணத்தில் DHL வலைப்பின்னலுடன் முதல் முதலாக திருமுருகன் கொம் நெற் இணைக்கப்பட்டுள்ளது.
DHL Online Tracking

வடமாகாணத்தில் அங்கீகாரம் பெற்ற ஒரே முகவர்

London Rs750
CANADA, U.S.A, FRANCE, DENMARK, GERMANY, ITALY, NORWAY, SWISS Rs900

220 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு ஆகாய கடல் மார்க்கமாக உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புபொருட்கள், DVD, VCD போன்ற பொருட்களை மிகவிரைவாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்

10 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு



TCN Express,
2B,Nelsan place,Colombo-06.
Customer service No.021 222 7835

குறிப்பு
DHL கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. போலி முகவர்களுக்கு கூடுதலான கட்டணத்தைச் செலுத்தி ஏமாற்றமடையாதீர்கள்.
ரூபாவிலோ அன்னிய நாட்டுச் செலாவணி முறையிலோ செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் பொதிகளை செலுத்தி உங்களுக்கான DHL Tracking Number களை பெற்றுக்கொள்ளலாம்.

திருமுருகன் கொம்நெற்

இல.259 ,கே.கே.எஸ் வீதி,யாழ்பாணம். இல.18.பிரதானவீதி.நெல்லியடி. இல.05.திருநகர் பிரதான வீதி.கிளிநொச்சி. இல.46.ஆடியபாதம் வீதி.திருநெல்வேலி.



WES

World Express Servives
International & Local Courier Service





- குறைந்த செலவிலும், துரிதமாகவும், உங்கள் உறவுகள் மற்றும் நண்பர்களுக்கு பரிசுப்பொதிகள், கடிதங்கள் போன்றவற்றை அனுப்பி வைக்க இன்றே எங்களை நாடுங்கள்
- நீங்கள் அனுப்பும் பொதிகள் 3,4 நாட்களில் உங்கள் உறவினர்களின் கைகளில் ஒப்படைக்கப்படும்
- 10kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்
- உங்கள் பொருட்களை உரியவர்களிடம் ஒப்படைக்க நாங்கள் தயார். எங்களை தொடர்பு கொள்ள நீங்கள் தயாரா?

தலைமை அலுவலகம்:
338, அளுத் மாவத்தை வீதி, கொழும்பு -15
தொ.பே: 0112520894

கிளை: 227, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
(இந்திய தூதரகத்திற்கு அருகாமை)
தொ.பே: 021 2220356

E.Mail: Worldexpress.ser@gmail.com

கிளை: 180/5 புகையிரத நிலைய வீதி:
வைரவ புளியங்குளம்,வவுனியா
தொ.பே: 024 490 3200


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.